விலை ரூபா 1-25

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

NATIONAL TAMIL DAILY

மலர் 25 சுடர் 2 ஷவ்வால் 17 இதழ் 153
யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 17-7-84

## "தமிழீழப் புலிகளினால் துன்புறுத்தப்படுகிறார்கள்"

(கொழும்பு)

''இலங்கையின் வடக்கு, கிழக்குப் பகுதிகளில் வாழும் ஹரிஜனர்கள் சாதிபேத அடிப்படையில் தாங்கள் கொடுமைப்படுத்தப்படுவதாக அரசாங்கத்திற்கு உணர்ச்சி பூர்வமான வேண்டுகோள் ஒன்றை விடுத்துள்ளனர்'' என்று தேசிய பந்தோபஸ்து அமைச்சர் திரு. லலித் அத்துலத்முதலி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

''வடக்கு, கிழக்குப் பகுதிகளில் வாழும் ஹரிஜனர்கள் தங்களின் உயிரையும், உடைமைகளையும் அரசாங்கம் பாதுகாக்கவேண்டுமென்று

(10ம் பக்கம் பார்க்க)

## விசாரணையின் பின்னர் ஆசிரியர்கள் விடுதலை

[கிளிநொச்சி]

இராணுவத்தினரால் விசாரணைக்கு அழைத்துச்செல்லப்பட்ட கிளிநொச்சி மகாவித்தியாலயத்தைச் சேர்ந்த ஐந்து

(10ம் பக்கம் பார்க்க)

# சர்வகட்சி மகாநாடு மீண்டும் ஒத்திவைக்கப்படலாம்!

(நமது சிறப்பு நிருபர்)

**தமிழர் பிரச்னை சம்பந்தமான சர்வகட்சி மகாநாடு, மீண்டும் ஒத்திவைக்கப்படலாம் என்று தெரியவருகிறது.**

சர்வகட்சி மகாநாடு இம்மாதம் இருபத்துமூன்றும் திகதி மீண்டும் ஆரம்பமாகும் என்று அரசாங்கம் ஏற்கனவே அறிவித்திருந்த போதிலும், உத்தேச ஜுலை துக்கதினத்தையொட்டி இம்மகாநாட்டை பிறிதொரு திகதிக்கு ஒத்திவைக்குமாறு, ஜனாதிபதி ஜெயவர்த்தனவை தமிழர் விடுதலைக் கூட்டணி செயலாளர்நாயகம் திரு. அ. அமிர்தலிங்கம் தந்திமூலம் கோரியிருந்தது தெரிந்ததே.

இம்மாதம் 25-ம் திகதியைத் துக்கதினமாக அனுஷ்டிக்குமாறு திரு. அமிர்தலிங்கம் விடுத்த கோரிக்கை குறித்தும் இம்மாதம் 25-ம் 26-ம் திகதிகளில் ஹர்த்தால் அனுஷ்டிக்குமாறு விடுக்கப்பட்ட கோரிக்கைபற்றியும்ஆராய்ந்து வரும் அரசாங்கம் கூட்டணிச் செயலாளர் நாயகம் திரு. அ. அமிர்தலிங்கத்தின் கோரிக்கையைக் கவனத்தில் எடுத்து, உத்தேச சர்வகட்சி மகாநாடு தொடர் கூட்டத்தை இம்மாத இறுதிவாரத்தில் அல்லது அடுத்தமாதம் முதல் வாரம் மீண்டும் ஆரம்பிக்கலாம் என்றும் அறியப்படுகிறது.

## கண் காட்சி

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்ட தமிழ் ஆசிரியர் சங்கத்தின் மாபெரும் எழுச்சிக்கூட்டமும் கண்காட்சியும் எதிர்வரும் ஜுலை 21ம் 22ம் திகதிகளில் மட்டக்களப்பில் நடைபெறும்.

## எம். ஜி. ஆர் — 'வெங்கட்' பேச்சுவார்த்தை

(சென்னை)

இந்திய மத்திய பாதுகாப்பு அமைச்சர் திரு. ஆர். வெங்கட்ராமன் நேற்றுச் சென்னையில் தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எம்.ஜி. ராமச்சந்திரனைச் சந்தித்து முப்பது நிமிடங்கள் பேச்சுவார்த்தை நடத்தினார்.

இப்பேச்சுவார்த்தையின் விபரங்கள் எதுவும் நேற்று வெளியிடப்படவில்லை. (வெ)

## அந்த இளைஞர் சடலம் அடையாளம் காணப்படவில்லை

(யாழ்ப்பாணம்)

யாழ் ஆஸ்பத்திரி பிரேத அறையில் வைக்கப்பட்டிருக்கும் இனம்தெரியாத இளைஞரின் சடலம் அடையாளம் காணப்படாத நிலையிலேயே இருக்கிறது.

இச் சடலத்தை பதில் சட்ட வைத்திய அதிகாரி பேராசிரியர் என். சரவணபவானந்தன் நேற்றுமுன்தினம் பிரேத பரிசோதனைசெய்தார்.

ரோந்து சேவையிலீடுபட்டிருந்த அதிரடிப் பொலிஸ் பிரிவினரால், கடந்த வெள்ளிக்கிழமை இரவு இச் சடலம் கொண்டுவரப்பட்டு யாழ். ஆஸ்பத்திரி பிரேத அறையில் வைக்கப்பட்டது தெரிந்ததே. [மா]

## நெடுங்கேணியில் 20 அகதிகள் குடும்பம் குடியேற்றம்!

(வவனியா)

நெடுங்கேணி தண்டுவான் கிராமத்தில் 20 அகதிகள் குடும்பங்கள் குடியேற்றப்படவுள்ளன.

வவனியா சர்வோதய இயக்கம் இதற்கான நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது

ஒரு ஏக்கர் நிலம் வழங்கப்படுவதுடன் பத்தாயிரம் ரூபா பெறுமதியான வீடு ஒன்றும் சர்வோதய இயக்கத்தினரால் கட்டிக் கொடுக்கப்படவுள்ளன.

முல்லைத்தீவு- நெடுங்கேணி வீதியில் தண்டுவான் என்ற இடத்திலேயே இவர்கள் குடியமர்த்தப்படவுள்ளனர்.

குடிநீர் வசதிகளுக்காக குழாய்கிணறுகளும் இப்பிரதேசத்தில் அமைக்கப்படவுள்ளது.

அத்துடன் கூட்டுறவு அடிப்படையிலான விவசாயப் பண்ணை ஒன்றும், மக்கள் வியாபார நிலையம் ஒன்றும் இப்பகுதியில் ஆரம்பிக்கப்படவிருக்கின்றது.

கடந்த ஜுலை கலவரஅகதிகளே இங்கு குடியேற்றப்படுபவர்கள் என்பது குறிப்பிடதக்கது.

## கூட்டணி கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் தொகுதி தமிழர் விடுதலைக் கூட்டணி ஆதரவாளர்களின் கருத்தரங்கு, கூட்டணித் தலைமைக் காரியாலயத்தில் கூட்டணித் தலைவர் திரு. மு. சிவசிதம்பரம் தலைமையில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

தற்போதைய நிலைமைபற்றி இக்கருத்தரங்கில் விரிவாக எடுத்துக்கூறப்பட்டது. (க)

## 'வித்தி'க்கு மட்டுநகரிலும் மணிவிழா

(மட்டக்களப்பு)

யாழ், பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் சு. வித்தியானந்தனுக்கு இம்மாத 22-ம் திகதி மட்டக்களப்பு நகரமண்டபத்தில் மணிவிழா கொண்டாடப்படவிருக்கிறது.

கோட்டைமுனை இளைஞர் கழகத்தினரால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள இம்மணிவிழாவிற்கு வித்துவான் எவ். எக்ஸ் சி நடராசா தலைமை வகிக்கின்றார்.

யாழ். பல்கலைகழக விரிவுரையாளர் கலாநிதி மௌனகுரு, கல்விமான் எம். கணபதிப்பிள்ளை உட்பட பல இலக்கியவாதிகள் கலந்து கொண்டு ஆசியுரை வழங்குவார்கள்.

இம் மணிவிழாவில் கலந்து கொள்ளும் பேராசிரியர் வித்தியானந்தன், அன்றைய தினம் மாலை கோட்டைமுனை இளைஞர் கழகத்தின் பரிசளிப்பு

(10ம் பக்கம் பார்க்க)

## நேர்முகப்பரீட்சை 19-ம் திகதி

(யாழ்ப்பாணம்]

இராமநாதன் நுண்கலைக்கல்லூரிக்கான அனுமதி பெறுவதற்காக இம்மாதம் 21-ம் திகதி நடத்தப்படவிருந்த நேர்முகப்பரீட்சை முன்கூட்டியே நடத்தப்படுவதற்கான ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாகப் பேராசிரியர் கா. சிவத்தம்பி கூறினார்.

(10ம் பக்கம் பார்க்க)

## கல்விக் கண்காட்சி

(மானிப்பாய்)

மானிப்பாய்க் கல்வி வட்டார ஒன்றிணைப்புக் கல்விக் கண்காட்சி நாளை யாழ். இணுவில் அ. மி. த.க பாடசாலையில் நடைபெறவிருக்கிறது.

இக்கண்காட்சி மானிப்பாய் வட்டாரக் கல்வி அதிகாரி திரு ச. தனஞ்செயன் தலைமையில் நடைபெறும். பிரதம விருந்தினர்ளாக யாழ். பிரதேசக் கல்விப்பணிப்பாளர் திரு. ம. சிமியாம்பிள்ளை திருமதி ஜெ. சிமியாம்பிள்ளை ஆகியோரும் சிறப்பு விருந்தினராக அலுவலக வட்டாரக் கல்வி அதிகாரி திரு. சி, இராசநாயகமும் கலந்து கொள்வார்கள்.

# 'யுனிசெப்' அங்குரார்ப்பணம்: அதிகாரிகள் நாளை யாழ். விஜயம்

## திட்டத்தின் பொறுப்புகளை ஆணையாளர் ஏற்றார்

(கா. யோகநாதன்)

யாழ்ப்பாணம் மாநகர சபைப் பகுதியில் 'யுனிசெப்' அபிவிருத்தித் திட்டத்தை அங்குரார்ப்பணம் செய்வதற்கு நாளை 18-ம் திகதி இரு உத்தியோகத்தர்கள் யாழ்ப்பாணம் வருகிறார்கள்.

நாளை யாழ். நகர் வரும் 'யுனிசெப்' திட்ட அலுவலர் திரு. எஸ். காசிநதன், தேசிய வீடமைப்பு அதிகார சபை நகரப்புறத்திட்ட முகாமையாளர் ஜனாப் ஹமீத் ஆகியோர் இரு தினங்கள் இங்குதங்கி அபிவிருத்திக்கான இடங்களை நேரில் பார்வையிடுவார்கள்.

யாழ் மாநகரசபை ஆணையாளர் திரு. சீ. வீ கே. சிவஞானம் கடைசி நேரத்தில் எடுத்த முயற்சியினால் முன்னர் சேர்க்கப்படாமல்இருந்தயாழ். மாநகரசபைப்பகுதியும் 'யுனிசெப்' திட்டத்தில் இடம்பெற்றது.

மீண்டும் இத்திட்டத்தைக் கைவிட முயற்சி எடுக்கப்பட்ட போது ஆணையாளர் திரு. சிவஞானம் நேரில் சென்று இத்திட்டம் அமுல்செய்வதற்கான சகல பொறுப்புக்களையும் ஏற்றுக்கொண்டார். இதனைத் தொடர்ந்து இத்திட்டத்தை அமுல்நடத்தத் துரித நடவடிக்கை எடுக்கப்பட்டது.

நாளைவரும் இரு உத்தியோகத்தர்களும் யாழ் மாநகர சபை ஆணையாளர் திரு. சீ. வீ. கே. சிவஞானம் சபை உத்தியோகத்தர்களுடனும் திட்டங்கள்பற்றி நேரில் கலந்துரையாடுவார்கள். நாளை மாலை இவர்கள் நன்னீர்த்திட்டம், மலகூடங்களுக்கான பொதுக் குழித்திட்டம், குழாய்க்கிணறுத்திட்டம் ஆகியவற்றை அங்குரார்ப்பணம் செய்து வைப்பார்கள்.

19-ம் திகதி காலை மற்றும் அபிவிருத்தி இடம்பெறும் இடங்களை நேரில் பார்வையிடுவார்கள்.

19-ம் திகதி பிற்பகல் யாழ். மாநகரசபைக் கமிட்டி அறையில் ஆணையாளர் திரு. சிவஞானம் தலைமையில் நடைபெறும் சமூக அபிவிருத்திக் குழுப் பிரதிநிதிகளின் கூட்டத்தில் இவர்கள் கலந்துகொள்வார்கள் இக்கூட்டத்தில் அபிவிருத்தித் திட்டங்கள் பற்றி விரிவாக எடுத்துக்கூறப்படவிருக்கிறது. (க)

# விளம்பரம்

## விற்பனைக்கு

மடத்தடி சாவகச்சேரி வடக்கில் 4½ பரப்புக் காணி விற்பனைக்குண்டு, தொடர்பு:S.R. ராஜேஸ்வரன் ஜயா கடையடி சாவகச்சேரி வடக்கு, சாவகச்சேரி. 887

வல்வெட்டித்துறை 'சிவன் கோவில் வீதியிலுள்ள ''கலா பவனம்'' வீடும்' காணியும் (சகலவசதிகளுடன்) விற்பனைக்குண்டு. நேரில் தொடர்பு கொள்ளவும். 910

வீட்டுடன் இரண்டுபரப்புக் காணி விற்பனைக் குண்டு. தொடர்பு கொள்ளவும். சி. வேலாயுதம் விக்காவில் காரை நகர் வடக்கு காரைநகர். 915

பருத்தித்துறை கீரிமலை பிரதான வீதியில் காங்கேசன் துறை பட்டணசபைக்கு முன்பாக சகல வசதிகளுடன் (மின்சாரம், நன்னீர்) 3 பரப்புக் காணி வீட்டுடன் விற்பனைக் குண்டு. சந்தை, பாடசாலை, பஸ்நிலையம் அருகில் உள்ளது. தொடர்பு: முகவரி வை. துரைச்சாமி, கனகசபை வீதி, கீரிமலை ரோட், காங்கேசன் துறை. 907

சுன்னுகம் டாக்டர் சுப்பிரமணியம் வீதியில் நான்கு நிலப்பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: சி. கோபாலகிருஷ்ணன், நாகேஸ்வரி வித்தியாலய வீதி, பருத்திக்கலட்டி, சுன்னுகம். [923]

Northtown 4 நாள் சேவல் குஞ்சு 1-65 வெள்ளை பேட்டுக் குஞ்சு 8-75 குறஸ் பிறலேஸ் 4-50. ''ராதாகிருஷ்ணஸ்'' 392, நாவலர் ரோட், கயிலாச பிள்ளையார் கோவிலடி. யாழ்ப்பாணம், [921]

## தவறிவிட்டது

14-7-84இல் கல்வியங்காட்டிற்கும்கோப்பாயிற்கும்இடையில் 36 Sri 2699, 44 Sri 5720 இன் இன்சூரன்ஸ் ரக்ஸ் தவறிவிட்டது கண்டவர்கள் தயவு செய்து கோப்பாய் பெற்ரோல் நிலையத்தில் ஒப்படைக்கவும். (920)

## தேவை

ரேடியோ திருத்துவதில் அனுபவமும், திறமையுமிக்க (Radio Technicians) சம்பளம் 1,000/- — 1500/-. ரேடியோ உப உறுப்புக்கள் விற்பனையில் அனுபவம்மிக்க விற்பனையாளர்கள் தேவை. சம்பளம் 750/- — 1,000/- உடன் தொடர்பு கொள்ளவும். Expo Electronics, 45, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (918)

## வாடகைக்கு

சுண்டிக்குழி கச்சேரிக்கு அருகாமையில் சகல வசதிகளும் கொண்ட வீடு உடன் வாடகைக்கு உண்டு, தொடர்பு; கதிர் காட்வெயஸ் 11/1, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் தொலைபேசி: 23130 (924)

## வீரமாகாளி ஆடிப்பூர உற்சவம்

[யாழ்ப்பாணம்]

வண்ணை நல்லூர் ஸ்ரீ வீரமாகாளி அம்மன் தேவஸ்தான அஷ்டஹஸ்த அம்பாள் ஆடிப்பூர அலங்கார உற்சவம் இம்மாதம் 22 ம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

29 ம் திகதி சப்பறமும், 30 ம் திகதி காலை இரதோற்சவமும் 31 ம் திகதி தீர்த்தோற்சவமும் நடைபெறவுள்ளன.

## பின்னுறுதிக் கட்டளை அறிவித்தல்

### சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றம்

கொடிகாமம் அல்லாரை வடக்கு காலஞ் சென்ற சின்னத்தம்பி கந்தன் அல்லது கந்தர் என்பவரின் மரணசாதனமற்றமரணச் சொத்துக்களின் விடயம் சம்பந்தமாக,

மரணமெய்தியவர்

கந்தர் அல்லது கந்தன் சீவரத்தினம் அல்லாரை வடக்கு, கொடிகாமம்

மனுதார்

தத்துவ வழக்கு இல: 217

எதிராக

கந்தன் கணபதி அல்லாரை வடக்கு, கொடிகாமம்.

எதிர்வாதி

மேலேயுள்ள இலக்கங் கொண்ட மரணசாதன வழக்கு மேலே குறிக்கப்பட்ட இறந்து போனவரின் மரணச் சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு மேற் கூறிய மனு 1984ம் ஆண்டு பங்குனி மாதம் 19ம் திகதி பதில் மாவட்ட நீதிபதி உயர் திரு எம். சு.கந்தசாமி முன்னிலையில் எடுபட்டு மேற்கூறிய மனுதார் மரணமெய்தியவரின் சொத்தை நிருவகிப்பதற்கும் மரணமெய்தியவரின் சொத்தைப் பரிபாலனம் செய்வதற்கும் தகுதி உடையவரென இந் நீதிமன்றம் காண்பதால்:

மேற்கூறிய மனுதாரை மரணமெய்தியவரின் சொத்துக்களை நிருவகிப்பதற்கு மேற்கூறிய எதிர்வாதி அல்லது அச்சொத்தில் அக்கறையுள்ளவர் எவரும் 1984ம் ஆண்டு வைகாசி மாதம் 9ந் திகதி முற்பகல் 9மணிக்கு இந் நீதிமன்றத்தில் வெளிப்பட்டு இந்தப் பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுன தாக்கப்படலாகாதென்பதற்கு காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றுர்.

1984ம் ஆண்டு பங்குனி மாதம் 19ம் திகதி

**ஆ.குணநாயகம்**
பதிவாளர்
மா. நீ சாவகச்சேரி

தயாரித்தவர்
**செ.பாலகிருஷ்ணன்**
மனுதாரின் சட்டத்தரணி

மறுதவணை 20-6-84
**ஆ.குணநாயகம்**
பதிவாளர்

மறுதவணை 18-7-84
**ஆ.குணநாயகம்**
783

## தாராள பொருளாதாரக் கொள்கை கூட்டுறவு வளர்ச்சிக்குத் தடை!

(பச்சிலைப்பள்ளி)

''தாராள இறக்குமதிக் கொள்கை, பணவீக்கம் என்பன கூட்டுறவுச் சங்கத்தின் வளர்ச்சிக்கு இன்று தடையாக உள்ளன.

இவ்வாறு கூட்டுறவுத் தலைமைக் காரியாலயப் பரிசோதகர் திரு எம்.வாரித்தம்பி பச்சிலைப்பள்ளி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் விசேட பொதுக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய போது கூறினுர்.

விசேட பொதுக் கூட்டம் பச்சிலைப்பள்ளி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் திரு ஏ.பி.ஜோஜ் தலைமையில் பளை மகாவித்தியாலயத்தில் அண்மையில் நடைபெற்றது.

கூட்டுறவுப் பரிசோதகர் தொடர்ந்து உரையாற்றும் போது, ''முன்னைய அரசாங்கத்தில் பொதுமக்கள் கூட்டுறவுச் சங்கத்தின் சேவையை நாடினுர்கள். கூட்டுறவுச் சங்கங்களை இன்று இலாபத்தில் இயங்க வைப்பதே பெரும் சிரமமாக உள்ளது.

கூட்டுறவு காரியாலயப் பரிசோதகர் திரு கே.பாலச்சந்திரன், கூட்டுறவு பெரும்பாகப் பரிசோதகர் திரு எஸ்.நல்லைநாதன் ஆகியோரும் கலந்து கொண்டார்கள்.

## கல்வி வள நிலைய தமிழ் அறிவுப் போட்டி

(யாழ்ப்பாணம்)

நல்லூர் வட்டாரக் கல்வி வள நிலையம் பாடசாலை மாணவர்களுக்கிடையே நடத்திய தமிழ் அறிவுப் போட்டியில் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசளிப்பு விழா யாழ். இந்து மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது.

நல்லூர் கல்வி வள நிலையத் தலைவர் கலைமாணி சு.சிவநாயகமூர்த்தி தலைமையில் நடைபெற்ற விழாவில் முதன்மை விருந்தினராக கலந்து கொண்ட யாழ் மாவட்ட மேலதிக கல்விபணிப்பாளர்கவிஞர் இ.முருகையன் பரிசுகளை வழங்கினுர்.

கல்வி வளநிலைய நான்காவது ஆண்டு நிறைவு விழாவை யொட்டி இப் போட்டிகள் நடைபெற்றன என்பது குறிப்பிடத்தக்கது.

இப்போட்டிகளில் பரிசுபெற்ருேர் விபரம் பின்வருமாறு:

மேற்பிரிவு: முதலாம் பரிசு செல்வி கௌரி சுப்பிரமணியம் (யாழ். இந்து மகளிர் கல்லூரி) இரண்டாம் பரிசு: செல்வி ஜீவமலர் சபாரத்தினம் (யாழ். இந்து மகளிர் கல்லூரி), மூன்ரும் பரிசு: செல்வி தயாநிதி தம்பிராசா (யாழ். இந்து மகளிர் கல்லூரி).

பாடசாலை நிலைப்பரிசுகள்: செல்வன் ந.கணேஸ்வரன் (யாழ். இந்துக் கல்லூரி), செல்வி ந.பாக்கியலட்சுமி (பெரியபுலம் ம. வி), செல்வி ரீ.மதிபனு (கதீஜா ம வி).

கீழ்ப்பிரிவு; முதலாம் பரிசு; செல்வி வளர்மதி க. கசபை (யாழ். இந்து மகளிர் கல்லூரி) இரண்டாம் பரிசு: செல்வி இராஜநிதி நல்லையாபிள்ளை (யாழ். இந்துமகளிர் கல்லூரி), மூன்ரும் பரிசு: செல்வி ச. மேகலா (யாழ். இந்து மகளிர் கல்லூரி).

கல்வி வள நிலையத்தின் நான்காண்டுப் பணிகளைத் தெளிவுபடுத்தும் வகையில் நிலையம் 'கல்விவளம் என்ற தட்டச்சுப் பொறிப்புஏட்டையும் வெளியிடவுள்ளது. இதற்கானஏற்பாடுகளை கல்வி வள நிலையத் தலைவரும் நல்லூர் வட்டாரக்கல்வி அலுவலருமான கலைமாணி சு. சிவநாயகமூர்த்தி தலைமையில் வள நிலையப் பொறுப்பு அலுவலர் திரு பி.நடராசன் மேற்கொண்டு வருகிருர். (மா)

## ''தமிழரின் கலாசாரம் பேணப்பட வேண்டும்!''

[பண்டத்தரிப்பு]

''தமிழ் மக்களின் பண்பாடுகளையும், கலாசாரங்களையும் பேணிப்பாதுகாக்க வேண்டியது எமது பாடசாலைகளின் முக்கிய பணியாகும்.''

இவ்வாறு யாழ். பிரதம கல்வி அதிகாரி திரு. வெ. சபாநாயகம் பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியில் நடைபெற்ற தமிழ்த்தினவிழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரைநிகழ்த்தும் போது தெரிவித்தார்.

கல்லூரி அதிபர் திருமதி கலாவல்லி ஆறுமுகதாசன் தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில் திரு. சபாநாயகம் மேலும் பேசுகையில் கூறியதாவது:- ''தமிழ்மொழி மிகவும் தொன்மையானதும் பழமைவாய்ந்ததும் ஆகும். இதனைப் பேணிப் பாதுகாத்து பாரதி கூறியது போல், தேமதுரத் தமிழோசை உலகெலாம் பரவச் செய்யத் தமிழ் மக்கள் முன்வரவேண்டும். எமது பண்டைய கலைகள் பல அழிந்து ஒழிந்து போகின்றன. அவற்றைப் பாதுகாத்து எதிர்காலச் சந்ததியினருக்கு அளிக்க வேண்டிய பொறுப்பு பாட

(9ம் பக்கம் பார்க்க)

## கொள்ளைக்காரன் வெட்டிக்கொலை

(வவனியா)

வவனியா பொலிசாரால் நீண்ட நாட்களாகத் தேடப்பட்டு வந்த பிரபல கொள்ளைக்காரன் வெட்டிக் கொலை செய்யப்பட்டுள்ளான்.

சின்னத்துரை கே. சுமணதாசா என்ற 23 வயது கொள்ளைக்காரனே வெட்டிக் கொலை செய்யப்பட்டான்.

வவனியா இளமருதன்குளம் என்ற இடத்தில் இக்கொலை நடந்துள்ளது.

இக்கொலை தொடர்பாக இறந்தவருடைய மைத்துனன் உக்குரானகே குணசேகரா வவனியா பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

மரணவிசாரணை வவனியா மாவட்ட பதில் நீதிபதி திரு. ஆர். வி. வில்வராஜா நடத்தினுர்.

பிரேத பரிசோதனையினை மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் எஸ்.நிரஞ்சன் மேற்கொண்டார்.

பதில்நீதிபதி திரு. ஆர். வில்வராஜா கொலை எனத் தீர்ப்பளித்து பொலிசாரால் கைது செய்யப்பட்ட சந்தேக நபரை விளக்கமறியலில் வைக்கும்படி உத்தரவிட்டுள்ளார்.

## சிறுவர் கலைவிழா

(மன்னுர்)

திருக்கேதீச்சரம் கௌரி அம்பாள் வருடாந்த சிறுவர் கலைவிழா வித்தியாலய மண்டபத்தில் நடைபெற்றது.

திருக்கேதீஸ்வர ஆலய முகாமையாளர் புலவர் .அ. திருநாவுக்கரசு தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில் சிக்காக்கோ பல்கலைகழக பேராசிரியர் திரு ஜோன்.கஸ்வெல் பிரதம அதிதியாகவும், திரு க.மகேந்திரன், மாந்தை வட்டாரக் கல்வி அதிகாரி திரு.பி சிவகுருநாதன், பல்கலைக்கழக விரிவுரையாளர் திரு.ரகுபதி ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டனர். கலைநிகழ்சிகளும் இடம்பெற்றன.


வருடமொன்றுக்கு உங்கள் மூலதனத்திற்கு

**26%** தொடக்கம் **30%** வரை

வட்டி பெற்றுக்கொள்ளுங்கள்.

குறைந்த தொகை ரூபாய் ஆயிரம் (1000/-)

எந்நேரமும் அறிவித்தலின் பின் பணத்தைத் திருப்பிப் பெறலாம்.

விபரங்களுக்கு:-
JAFFNA PROPERTY TRADES LTD.,
3, நவீன சந்தை, (மேல் மாடி)
யாழ்ப்பாணம். போன்: 23698



குறேஸ் சர்வதேச தொலைத்தொடர்பு சேவை
(Cross International Telecommunication Services)

FOR ALL INTERNATIONAL AND LOCAL DIRECT DIALLING TELEPHONE CALLS.

INTERNATIONAL TELEX SERVICES :- NO DELAY AT ALL, CHEAP RATES, CONTACT US RIGHT NOW.

குறேஸ் சர்வதேச தொலைத்தொடர்பு சேவை.
(i) சர்வதேச, உள்ளூர் நேரடி தொலைத்தொடர்பு சேவை
(ii) சர்வதேச ரெலெக்ஸ் சேவை

உலகின் எப்பாகத்திற்கும் குறைந்த கட்டணத்தில் நேரடிச் சர்வதேச தொலைத்தொடர்பு சேவையும், ஒரு நொடிப்பொழுதில் பெற்றுக்கொள்ள உடன் நாடுங்கள்

CTS

Cross International Telecommunication Services
STAGE II, FIRST FLOOR, BUS STAND CENTRE ROAD,
MODEL MARKET, JAFFNA.
Phone No: 22040, 22065. Telex No: 22207 (C, T, S,)

# ஜம்மு - காஷ்மீரினுள் தீவிரவாதிகள் நுழைவதைத் தடுக்க நடவடிக்கை!

## எல்லைப் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டது

(ஸ்ரீநகர்)

**ஜம்மு - காஷ்மீர் மாநிலத்தினுள் தீவிரவாதிகள் நுழைவதைத் தடுக்கசகலநடவடிககைகளும் எடுக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.**

மாநில எல்லைப்பகுதியில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருப்பதாக மாநில புதியஅரசு நேற்று அறிவித்தது.

இதே வேளை ஸ்ரீநகரில் ஊரடங்குச் சட்டம் நீக்கப்பட்டு விட்ட பின்னர் எதுவித அசம்பாவிதங்களும் நடைபெறவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டது.

பாரூக் அப்துல்லாவின் அரசாங்கம் கலைக்கப்பட்டபின்னர் மாநிலத்தில் வன்செயல்கள் தலைதூக்கின. இதனைத்தொடர்ந்து ஊரடங்குச் சட்டம்பிறப்பிக்கப்பட்டிருந்தது.

## விஜய் அமிர்தராஜ் சாம்பியன்

(வாஷிங்டன்)

அமெரிக்காவில் நடைபெற்ற பிரபல ரெனிஸ் பந்தயமொன்றில் இந்திய வீரர் திரு.விஜய் அமிர்தராஜ் சம்பியனுனர்.

அமெரிக்காவில் நடைபெற்ற இப்போட்டியில் அமெரிக்க வீரர் ஒருவரைத் தோற்கடித்ததன் மூலம் இவர் சம்பியனுனர்.

## புதிய ஆசிரியர் நியமனத்தில் கிளிநொச்சியைச் சேர்ப்பதற்கு கல்விப் பணிப்பாளர் முயற்சி

(பச்சிலைப்பள்ளி)

புதிய ஆசிரிய நியமனத்தில் கிளிநொச்சி மாவட்டத்தினையும் சேர்த்துக்கொள்வது சம்பந்தமாக கிளிநொச்சி-முல்லைத்தீவு கல்விப்பணிப்பாளர் ஜனுப் எம்.எம். மன்சூர் கல்வி அமைச்சு அதிகாரிகளைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

புதிதாகச் சேர்த்துக்கொள்ளப்படவிருக்கும் ஆசிரிய நியமன விண்ணப்பத்தில் கிளிநொச்சி மாவட்டம் தவிர்க்கப்பட்டுள்ளது.

இதனுல்கிளிநொச்சி மாவட்டத்திற்குத் தனியாக ஆசிரியர்களை நியமிப்பதற்கு வாய்ப்பில்லாமல் போய்விடலாம்.

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள பொது ஸ்தாபனங்கள் இவ்விடயத்தினை கவனத்தின்கீழ் கொண்டுவந்துள்ளதை யடுத்து கல்விப்பணிப்பாளர் அமைச்சு அதிகாரிகளை சந்திக்கவுள்ளார்.

## பங்களாதேஷில் பலத்த மழை 7 பேர் பலி!

டாக்கா, ஜூலை 16

பங்களாதேஷில் தொடர்ச்சியாகப் பெய்துவரும் பலத்த மழையினுல் 7 பேர் பலியானதாகவும், ஆயிரக்கணக்கானேர் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அறிவக்கப்பட்டது. (வெ)

## "சோவியத் ஒத்துழைப்பு எமது நாட்டின் விளையாட்டுத்துறை வளம்பெற உதவும்"

### – அமைச்சர் வின்சன்ட் பெரேரா

மாஸ்கோ, ஜூலை 16

''விளையாட்டுத் துறையில் சோவியத் யூனியனுடன் நாம் பேணும் ஒத்துழைப்பு எமது நாட்டில் இத்துறை மேலும் வளம்பெற துணைசெய்யும். விளையாட்டுத்துறையில் உலகில் முன்னணி இடத்தை வகிக்கும் சோவியத் யூனியனுடன் இவ்வகையான தொடர்பினைப் பேணுவதில் நாம் பெருமிதமடைகின்றேம்''

அண்மையில் சோவியத்யூனியனுக்கு மேற்கொண்ட விஜயத்தின்போது விளையாட்டுத் துறை, நாடளுமன்ற விவகார அமைச்சர் வின்சன்ட்பெரேரா 'ஏபிஎன்' நிருபருக்களித்த பேட்டியின்போது மேற்கண்டவாறு கூறினர்.

இப்பேட்டியின் போது அமைச்சர் பெரேரா மேலும் கூறியதாவது;

''விளையாட்டுத் துறையில் இலங்கைக்கும் சோவியத் யூனியனுக்குமிடையிலான ஒத்துழைப்புக்கு வகைசெய்யும்

(9ம் பக்கம் பார்க்க)

## புதிய இயந்திரங்கள் பொருத்தப்படும்

(மட்டுவில்)

கேரதீவுககும் சங்குப்பிட்டிக்குமிடையில் மகாதேவா தாம்போதி கடற்பாதையில் போக்குவரத்துச்சேவையில் ஈடுபடும் இயந்திர சாதனங்களுக்கு வெளியிணைப்பு இயந்திரங்களைப் பொருத்தி இக்கடற்பாதை சேவையில் புதிய திருப்பத்தை ஏற்படுத்தும் முயற்சியில், யாழ். மாவட்ட பிரதம பொறியியலாளர் செயலகம் ஈடுபட்டுள்ளது.

கேரதீவு சங்குப்பிட்டிக்கிடையில்கடற்பாதைச் சேவையில் ஈடுபட்டிருந்த இயந்திரங்கள் அண்மையில் கொள்ளையடிக்கப்பட்டதைத் தொடர்ந்து இச்சேவை அடிக்கடி ஸ்தம்பிதமடைந்து வருகிறது,

இக்கடற்பாதை சேவையில் முன்பு இணைக்கப்பட்டிருந்த இயந்திரங்களைவிட குறைந்த குதிரைச் சக்தியைக்கொண்ட இயந்திரமே இணைக்கப்படவுள்ளதாக தெரியவருகிறது.

## பஞ்சாப்பில் மேலும் 15 பேர் கைது

(அமிர்தசரஸ்)

பஞ்சாப் மாநிலத்தில் மேலும் 15 தீவிரவாதிகள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை பொற்கோவிலின் சில இடிபாடுக்குள் இருந்து ஏராளமான வெடிமருந்துகளும் ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டன.

# 30 ஆண்டுகளாகத் தமிழருக்கு மாற்றுன்தாய் மனப்பான்மை

## கோப்பாய் கல்வி மூலவள நிலைய திறப்பு விழாவில் 'ஆலால்'

(யாழ்ப்பாணம்)

''அரசாங்கம் கடந்த முப்பதாண்டுகளாக, தமிழ்மக்களை மாற்றுந்தாய் மனப்பான்மையாக நடாத்துவதுமட்டுமல்லாமல் தமிழ் இனத்தையே அழிக்கும் சூழ்ச்சி நடைபெற்றுவருகின்றது. இன்று அது உச்சக் கட்டத்தை அடைந்துள்ளது'' என்று கோப்பாய் முன்னுள் எம். பி. திரு மு. ஆலாலசுந்தரம் தெரிவித்தார்.

கோப்பாய் கல்வி மூலவள நிலையத்தின் திறப்பு விழாவில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கோப்பாய் வட்டாரக் கல்வி அதிகாரி திரு. ஆ. வ. தங்கராசா தலைமையில் நடைபெற்றஇவ்வைபவத்தில் கோப்பாய் கல்வி மூலவ்ள நிலைய பொறுப்பதிகாரி திரு. எஸ். சி. எஸ். சிதம்பரநாதன் வரவேற்புரை நிகழ்த்தினர். தொழிலதிபர் திரு. செ. கந்தசாமித்துரை நிலையத்துக்கு நிரந்தரவைப்புக்காக இருபத்தையாயிரம் ரூபாவை வழங்குவதற்கான ஒப்புதல்அளித்து மண்டபத்தை திறந்துவைத்தார்.

முன்னுள் கோப்பாய் எம். பி. திரு. ஆலாலசுந்தரம் தொடர்ந்து பேசுகையில் ''இந்நிலையத்திற்கு கடந்த ஆண்டு 20 ஆயிரம் ரூபாவை வழங்கியிருந்தேன். இவ்வாண்டு கூடுதலான நிதியை வழங்க உத்தேசித்திருந்தும் அரசியல் சூழ்நிலைகளால் அதுமுடியவில்லை'' என்றுர்.

யாழ். பிரதம கல்விஅதிகாரி திரு. வி. சபாநாயகம் பேசுகையில் கூறியதாவது:

''கோப்பாய் கல்வி மூலவள நிலையம் மாணவர்களுக்கு கட்புல செவிப்புல உபகரணங்கள் முதலியவற்றேடு கருத்துப்பரிமாறல், கருத்தரங்குகள் போன்றவற்றை நடாத்துவதோடு, சமூகத்தையும், பாடசாலைகளையும் ஒன்றிணைத்து நிற்கும் பாலமாகவும் விளங்குவதைக் காணக்கூடியதாகவுள்ளது''.

''கடமையைக் கண்ணியத்துடனும் சேவை மனப்பான்மையுடனும் செய்துவருகின்ற இந்நிலையம் பொறுப்பதிகாரிக்கு பாராட்டுக்களைத் தெரிவிக்கின்றேன். வள்ளல்கந்தசாமித்துரைக்கும்,சோமாஸ்கந்தக்கல்லூரி நம்பிக்கை நிதியத்திற்கும் தொடர்புஇருககின்றது. பாடசாலைக்குஉதவிகள் செய்வதோடு பாடசாலை வளவில் அமைந்த கல்வி மூலவள நிலையத்திற்கும் பேருதவிசெய்ததற்கு அவரைப் பாராட்டாமல் இருக்கமுடியாது,''

விழாவில் தலைமைதாங்கிய திரு. ஆ. வ. தங்கராசா தமது தலைமையுரையில், யாழ். மாவட்டத்தில் உள்ள பதினெரு கல்வி வட்டாரங்களிலும், கோப்பாய் வட்டாரத்திற்கு மட்டுமே சொந்தக் கட்டடத்தில் கல்வி மூலவள நிலையம் இயங்கும் வாய்ப்புக்கிட்டியுள்ளது'' என்றுர்.

இவ்விழாவிற்கு வருகை தந்த சிறப்பு விருந்தினரும் இளைப்பாறிய கல்விப்பணிப்பாளருமாகிய திரு. ரி. மாணிக்கவாசகர் பேசும்போது 'பாடசாலையில் படிக்கின்ற படிப்பு மட்டும் படிப்பல்ல. பாடசாலைக்கு அப்பால் படிக்கின்ற படிப்பே வாழ்க்கைக்கு உதவும் படிப்பாகும். இதற்காகவே இக்கல்வி மூலவள நிலையங்கள் உருவாக்கப்பட்டன'' என்றுர்.

முன்னுள் பிரதேச சபைத் தலைவரும், சட்டத்தரணியுமான திரு. சதா. லோகேஸ்வரன், யாழ். பிரஜைகள் குழுச் செயலாளர் திரு. ஆர். பாலசுப்பிரமணியம், வலிகிழக்கு உதவி அரசாங்க அதிபர் திரு. கு. கிட்ணர், யாழ் மாவட்ட திட்டமிடல் அதிகாரி திரு. வி. எஸ். சுவாமிநாதன், முன்னுள் யாழ். மாவட்ட சபைத் தலைவர். திரு. ந. இராசேந்திரம், முன்னுள் மாவட்ட சபை உறுப்பினர் திரு. க. சின்னத்துரை, சோமாஸ்கந்த கல்லூரி அதிபர் திரு. எஸ். ஆர். சண்முகரத்தினம், திரு. க. ரவி ஆகியோரும் உரையாற்றினர்.

## காமராஜர் நினைவாக புதிய மாவட்டம்!

(சென்னை)

தமிழக முன்னுள் முதலமைச்சர் கே.காமராஜர் நினைவாக அவரது பெயரில் புதிய மாவட்டம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

விருது நகரை தலைநகராகக்கொண்டு அமைக்கப்பட்டுள்ள இந்த காமராஜர் மாவட்டம் தமிழகத்தின் 17 வது மாவட்டமாகும்.

பெருந்தலைவர் காமராஜரின் பிறந்த தினமான நேற்றுமுன்தினம் இந்த மாவட்டம் அமைக்கப்பட்டது.

இதே வேளை காமராஜர் பிறந்ததினம் தமிழக ஆளுநர் திரு.எஸ்.எல். குரானு தலைமையில் கொண்டாடப்பட்டது. இந்திய பாதுகாப்பு அமைச்சர் திரு. ஆர். வெங்கட்ராமன் உட்பட பலர் இவ்விழாவில் கலந்துகொண்டனர்.

## வவனியா சிறுபோக நெற்செய்கை: சந்துகுத்தி புழுவின் தாக்கம்! விளைச்சல் பாதிக்கப்படலாம்!

(வவனியா)

வவனியாவில் இவ்வருடம் சிறுபோக செய்கையில் பெருமளவு வீழ்ச்சி காணப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

சிறுபோக நெற்செய்கை செய்யப்பட்ட எல்லா இடங்களிலும் சந்துகுத்தி புழுவின் தாக்கம் காணப்பட்டுள்ளது என அவதானிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக இளம் நெற்பயிர்கூட புழுவின் தாக்கத்தினுல் பெருமளவு பாதிப்புற்றுள்ளது என அவதானிக்கப்பட்டுள்ளது.

இதனுல் இத்தடவை விளைவு குறிப்பிடத்தக்களவு வெகுவாகப் பாதிக்கலாம் என்றே அஞ்சப்படுகின்றது.

நீண்ட கால இடைவெளிக்குப் பின் வவனியாவில் இம்முறை சிறுபோக செய்கை செய்யப்பட்டது.

(9ம் பக்கம் பார்க்க)

# பாரூக் அப்துல்லா நடத்தவிருந்த ஊர்வலத்தை பொலிஸார் தடுத்தனர்!

(ஸ்ரீநகர்)

ஜம்மு-காஷ்மீர் முன்னுள் முதலமைச்சர் பாரூக் அப்துல்லா கைதுசெய்யப்பட்டு விட்டதாக வெளிவந்த செய்திகளில் உண்மை எதுவுமில்லை என்று தெரியவந்துள்ளது.

தடையைமீறி பாரூக் அப்துல்லா ஊர்வலம் நடத்த இருந்ததை தடுக்க பொலிசார் எடுத்த நடவடிக்கைகள் வெற்றியளித்துள்ளதாக மாநிலத்தின் உயர்பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அரசியலமைப்பின் 144வது பிரிவின் கீழான தடையை மீறி இவர் ஊர்வலம் நடத்தவிருந்ததை அறிந்த பொலிசார் அந்த ஊர்வலத்தைத் தடுக்க எடுத்த முயற்சிகள் வெற்றியளித்ததாக அந்த அதிகாரி கூறினுர். இவர் கைது செய்யப்பட்டதாக அந்த அதிகாரி கூறவில்லை.

### மணிவாக்கு

எவர் மனக்கலக்கம் அடைந்தால் உலக நன்மைக்குத் தீங்கு ஏற்படுமோ, அவர்கள் மனம் மகிழும்படி, தேவதைகளைப்போல அவர்களை நடத்த வேண்டும்.

—விதுரநீதி

## நமது நோக்கு

# கலவர அரசியல்

தீங்கும் துயரமும் உன்னை வந்தடையவேண்டிய தேவையொன்றுண்டு. அவைகளின் மூலம் நீ பண்படுகின்றாய். துன்பத்தைச் சகித்தல் மூலம் நீ வலிவு பெறுகிறாய். வலிவும் விவேகமும் உடையவன் எதையும் சமாளிக்கத் தெரிந்துகொள்கிறான். அவனுக்கு ஆகாத காரியம் ஒன்றுமில்லை.

இதுபோன்ற அறிவுரை இந்தக் காலத்தில் வாழும் இந்நாட்டு தமிழ் மக்களுக்கு மிகஅவசியம்.

வெறும் அறிவுரையாகவோ புத்தகப் பாடமாகவோ அது அமைந்துவிட்டால் இன்று இப்பகுதி மக்களை எதிர்நோக்கும் பல்வேறு அவலங்களை முறியடிப்பது முடியாத காரியமாகும்.

ஜூலை 25ம் நாள் இலங்கைவாழ் தமிழ்மக்களுக்கொரு தேசிய நினைவுதினமென்பதை நினைவூட்ட வேண்டியதில்லை. அதனை எதிர்மறைநோக்கில் நினைவுகூரும் தகவல்களும் சவால்களும் மக்களுக்கு அனாவசிய அச்சத்தை உண்டுபண்ண முடியும். அதிலும் முன்எச்சரிக்கை தேவை.

'கலவரம் எங்கே வந்தாலும் முறியடிப்போம்' என்று பந்தோபஸ்து அமைச்சர் லலித் அத்துலத்முதலிவிடுத்திருக்கும் எச்சரிக்கையை இருகோணங்களில் நோக்க வேண்டிய நிர்ப்பந்தம் தமிழ் மக்களுக்கு உண்டு.

கடந்த வருடம் நடைபெற்ற கலவரத்தைப் பற்றிய அரசின் கருத்து ஒரு தலைப்பட்டது. உயிரிழந்த, உடைமை இழந்த, பல்வேறுஇன்னல்களுக்காளான தமிழ் அப்பாவி மக்கள் பற்றிய அனுதாபம், எங்கும், எப்பவும், எவராலும் பேசப்படவில்லை.

தான் செத்துத்தான் அழ வேண்டிய துர்ப்பாக்கிய நிலையே தமிழ்மக்கள் நிலை என்பது துன்பத்தின் சிகரம்.

அரசாங்கம் அடிக்கடி நினைவூட்டுவது கலவரத்தால் நாட்டுக்கேற்பட்ட சர்வதேச அவமதிப்புப் பற்றியே! இக்கொடிய சம்பவத்தை உலகறிந்திராவிட்டால் நட்டம் ஏதுமில்லை என்ற கருத்து தொக்கு நிற்கின்றது; நாட்டின் நிலையைச் சீர்படுத்த இந்த மனப்போக்கு ஒருபோதும் உதவாது.

இவ்வித கலவரம் உருவாகுதற்கு தமிழர் 'பயங்கரவாதமே' காரணமென்பதால், அதனைமுறியடிப்பது அரசின் முக்கிய பொறுப்பாகக் கொள்ளப்படுகின்றது. ''அந்தப் பொறுப்பை இராணுவத்திடம் -முப்படையிடம் - ஒப்படையுங்கள் வேறெந்த விதத்திலும் அமைதியீனத்தை உருவாக்கி விடாதீர்கள்'' என்பதே அமைச்சர் லலித் அடிக்கடி வழங்கும் அறைகூவல்.

இந்தப் பணிப்புரை சிங்கள மக்களுக்கே குறிப்பாக விடப்படுகிறது; கஞ்சிக்குள் பயறுபோல இடைக்கிடை 'இந்த இராணுவ முயற்சி தமிழ்மக்களுக்கெதிராகவல்ல பயங்கரவாதிகளின் கொடுமையை ஒழிக்கவே'' என்றும் சொல்லப்படுகிறது.

தமிழ்மக்கள் நாட்டில் எங்கு தான் வாழ்ந்தாலும் சிவில் ஆட்சியின் சிறப்பில் நம்பியிருக்க முடியாத அபாயம்நிலவுகின்றது.இதனைஅகற்றுவதாலேயே இங்கு ஜனநாயக ஆட்சிக்குரிமைபேசலாம்.

ஒருபக்கம் 'பயங்கரவாதம்' என்று அரசு குறிப்பிடும் பயங்கரச் செயல்கள் காரணமாக எவ்வித முன்னறிவித்தலுமின்றி ராணுவ நடவடிக்கைக்கு தமிழ் அப்பாவி மக்கள் பலியாகலாமென்ற அச்சம்; மறுபக்கம் இன்று நன்கு வெளியாகப் பேசப்படும் ''தமிழர் விடுதலை ராணுவ இயக்கத்தின்'' தாக்குதல்கள் பற்றியதே. இதொரு சாதாரண மோதல் அல்ல; அப்பாவி மக்களுக்கு ஆபத்தான போராகவும் முடியுமென்ற அச்சம் அதிகரிக்கின்றது.

இந்திய நாட்டின் இன்றைய அரசியலை அதிகம் விமர்சிக்கும் இலங்கை வானொலி அங்கு உருவான கலவர அரசியலின் கொடுமைகளை அடிக்கடி பாராயணம் செய்வது பயனற்ற செயல் போல் தெரிகின்றது.

பஞ்சாபில் பொற்கோயிலை முற்றுகை செய்து மிகத் திறமையாக அங்கு உள்ளிட்டு பயங்கரவாதத்தை முறியடித்த இந்திய இராணுவம் கட்டுப்பாட்டுடனும், ராணுவத் திறமையுடனும் நடந்ததை எவரும் ஆட்சேபிக்கவில்லை.

ஆனால்விடயம் அத்துடன் முடியவில்லை. அங்கு நிலவும் குழப்பம், அண்மையில் நடைபெற்ற விமானக் கடத்தல், தொடரும் ஊரடங்கு போன்ற நடவடிக்கைகள் கலவர அரசியலின் தீங்குகளை நன்றாக நிருபிக்கின்றன.

இந்தப் படிப்பினையை இலங்கை அரசு கவனத்திற்கொண்டால் எவ்வித அகௌரவமுமின்றி தமிழர் பிரச்னைக்கு தீர்வு காணும் மனத்திடம் ஏற்படும்.

# ஜே.ஆரின் புதியயோசனைகளை பார்த்தசாரதி விளக்கினார்!

## ஏற்றுக்கொள்ளக் கூடியதாக இல்லை என்கிறார் சிவா

(கோண்டாவில்)

இலங்கையில் தமிழ் ஈழம் கேட்பவர்கள் ஒரு சில இளைஞர்களேயன்றி முழுத்தமிழ் மக்களும் அல்லவென்று வெளிநாடுகளில் அரசு [illegible] செய்கின்றது. இதனை சில நாடுகள் நம்பியும் உள்ளன. ஆகையினால் ''தமிழ் ஈழக் கோரிக்கையை முழுத் தமிழ் மக்களும் ஆதரிக்கின்றார்கள் என்பதைநிரூபிக்கவேண்டும்.''

மேற்கண்டவாறு தமிழர் விடுதலைக்கூட்டணித் தலைவர் திரு. மு. சிவசிதம்பரம் குறிப்பிட்டார்.

தமிழர் விடுதலைக் கூட்டணி நல்லூர் தலைமைக் காரியாலயத்தில் தலைவர் திரு. மு. சிவசிதம்பரம் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

''நாம் இந்தியாவில் இருக்கும்பொழுது ஜி. பார்த்தசாரதியைச் சந்தித்தோம். அப்பொழுது அவர் எங்களிடம் ஜே. ஆர். ஜெயவர்த்தனா கையளித்த ஒரு திட்டத்தைக் காண்பித்தார்.

அதில் குறிப்பிடப்பட்டுள்ளது மாவட்டசபைகளுக்கு மேலும் சில அதிகாரங்களை வழங்குவதாகவும் அவை என்ன அதிகாரங்கள் என்று குறிப்பிடப்படவில்லை. மேலும் மாவட்ட மந்திரிக்கு மேல் ஒரு மாகாண மந்திரியை நியமனம் செய்வதாகவும் அவருடன் நிர்வாக நடவடிக்கைகளை மேற்கொள்ள தன்னால் நியமிக்கப்படும் மூவர் கொண்ட நிர்வாகக் குழுவும் கடமையாற்றும். இக்குழுவின் தலைவராகவும் ஜனாதிபதியே இருப்பார் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

மகாண மட்டத்தில் காணப்படும் மாவட்டங்களிடையே இருந்து இருவர் தெரிவுசெய்யப்படுவார்கள். இவர்கள் மாகாணமட்டத்தில் நடவடிக்கைகளை மேற்கொள்வார்கள் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த இருவர் ஒரு மாவட்டத்திற்கு என்ன முறையின்கீழ் அந்த இருவரும் எவ்வாறு தெரிவுசெய்யப்படுவார்கள் என்பதுபற்றிக்குறிப்பிடப்படவில்லை. இதேபோன்று ஒரு மாகாணத்திற்கு உட்பட்ட மாவட்டசபை உறுப்பினர்கள் வேண்டுமாக இருந்தால் ஒன்று கூடி கூட்டத்தை ஒரு இடத்திலேயே நடத்தலாம் ஆனால் இத்தகைய சபை எப்பெயர் பெறும் என்றும் தெரியாது. இதனையும் நாம் பார்த்தசாரதியின் கவனத்திற்கு கொண்டுவந்தோம். ஜே. ஆர் இம்முறை இந்திய விஜயத்தின் போது பார்த்தசாரதியுடன் பேசியது ஓரேயொரு தடவை மட்டும்தான் பெருமளவு நேரம்இந்தியப்பிரதமர் திருமதி இந்திராகாந்தியுடனேயே பேச்

(7ம் பக்கம் பார்க்க)

# சனி, செவ்வாய் கிரகச் சேர்க்கையும், நட்சத்திர சாரரீதியில் விளைவுகளும்

சனி, செவ்வாய் சேர்க்கை டிசம்பர் தொடக்கம் 1986 ஒகஸ்ட் 4 வரை துலா இராசியில் இருக்கின்றது. இச்சேர்க்கையால் அல்லது பார்வையால் உலகரீதியில் பொதுவாக விபத்துக்கள், போராட்டங்கள், கலவரங்கள், பூகம்பங்கள், காலநிலை மாறுபாடுகளால் அழிவுகள் வெடிவிபத்துக்கள், தொற்று நோய்கள், புரட்சிகள் முதலியன ஏற்படச் செய்யும்.

நமது நாட்டைப் பொறுத்தவரை இலக்கினம் கும்பம் என்று சொல்லப்படுகிறது. கும்பத்திற்கு 1,12ம் அதிபதி சனி 3,10ம் அதிபதி செவ்வாயுடன் 9ல் சேர்கின்றது. அதனால் 1,3,9,10,12ம் பாவங்கள் குறிக்கும் பலன்கள் பாதிப்படைகின்றன. பொதுவாக [1] நாட்டின் நிலை, மதிப்பு, உள்நாட்டு விவகாரம் [3]போக்குவரத்து, செய்திதொடர்பு சாதனங்கள், வதந்தி [9]வெளிநாட்டு உறவு, பயணம், விமானம்' ஏற்றுமதி, வெளிநாட்டுக் குடிவாசிகள் ரேடியோத் தொடர்பு, மேல் படிப்பு நிலை [10] ஆட்சியிலிருக்கும் கட்சி, அரசாங்க நிலை, தேச கௌரவம், பொதுவான தலைவர்கள் [12] சிறைச்சாலையும் நிர்வாகமும், நாட்டின் குற்றச் செயல்கள். நாட்டின் போக்கு ஆகியவற்றை முன் கூறிய பாவங்கள் குறிக்கும்.

**ஜோதிடர்**
**இ. கே. குலசிங்கம்**

இக் காலத்துள் இக் கிரக செல்வாக்கு அதிகரிக்கும் பேதும், தாக்கப்படும்போதும் இவற்றின் தாக்க விளைவுகள் வெளிப்படும். 1983 ஜூலை மாதம்கூட சனி, செவ்வாய் கிரகங்கள் ஒன்றையொன்று சதுரப்பார்வையில் நோக்கிய பொழுது சூரியன் ஜூலை 18ம் திகதியிலிருந்து 29ம் திகதி வரை கடக இராசியில் சனியின் (பூசம்] சாரத்தில் சஞ்சாரம் செய்தது, சூரியனும் செவ்வாயுடன் சேர்ந்து சனியுடன் ஒன்றையொன்று சதுரப் பார்வையால் தாக்கின. 1982 ஜூலை 23ம் திகதி சந்திரன். தாக்கமடைந்து சூரியனின் நட்சத்திர(உத்திராடம்)சாரத்திலும் மகர(சனியின்) இராசியிலும் 25ம் திகதி செவ்வாயின் (அவிட்டம்) சாரத்திலும் சஞ்சரித்தது. அப்போது நடந்த அனர்த்தங்களை யாவரும் அறிவர்.

1984 ஜூலை ஒகஸ்ட் மாத கிரக சாரங்களி. புதன் ஜூலை 5 இலிருந்து ஜூலை 10 வரையும் சனியின் சாரத்தில் சஞ்சரிக்கின்றது.

சுக்கிரன் ஜூலை 11 இலிருந்து ஜூலை 29 வரையும் சனியின் (பூசம்) சாரத்தில் சஞ்சரிக்கிறது. சூரியன் 18 இலிருந்து ஜூலை 29 வரை சனியின் (பூசம்) சாரத்தில் சஞ்சரிக்கிறது. அதேநேரம் சனி செவ்வாயை சதுரப்பார்வையிலும் சஞ்சரிக்கிறது. தினங்களைக்குறிக்கும் சந்திரன் ஜூலை 13, 14, 15ம் திகதிகளில் சனியின் (மகரம்) இராசி

(9ம் பக்கம் பார்க்க)

# ஊழியர் ஆட்சேபம்

(பண்டத்தரிப்பு)

யாழ் மாவட்ட மலேரியா தடுப்பு இயக்கத்தில் கடமையாற்றும் ஊழியர்கள் தங்களின் சம்பளப் பணத்தை வங்கிக்கிளைகளில் செலுத்தப்பட்டு வங்கி மூலம் வழங்க மலேரியா இயக்க பிரதேச அலுவலகப் பொறுப்பதிகாரிமேற்கொண்ட நடவடிக்கைக்கு பலத்த ஆட்சேபம் தெரிவித்துள்ளனர்.

மேற்படி ஊழியர்கள் தங்கள் சம்பளப்பணத்தை இதுவரை காலமும் யாழ்.பிரதேச மலேரியா தடுப்பு அலுவலகத்தில் பணமாக நேரடியாக பெற்று வந்தார்கள்.

தற்போது வட பகுதியில்ஏற்பட்டுள்ள சூழ்நிலைகாரணமாக இந்த ஊழியர்களின் சம்பளப் பணத்தை வங்கிகள் மூலம் வழங்குவதற்கு முடிவு செய்யப்பட்டு அதற்கு வசதியாக

(7ம் பக்கம் பார்க்க)

## அருள்மிகு பழை ஸ்ரீ பராசக்தி அம்மன்

வானுற ஓங்கும் வேலும்
வளர்முகில் காணுசீரரசும்
தானுற விளங்கு நற்
தலந்தனில் உறையும் அன்னை
மான்விழி மங்கலத்தாள்
மண்ணுளார் பரவுந் தேவி
தேன் நிகர் சக்திஅன்னை
திகழ்ந்திடு திருத்தலத்தை
பாங்கொடு விளக்க உன்னி
பணி பல செய்தே நாளும்
தேங்குசீர் அடியார் கூட்டம்
திகழ்ந்திடும் அன்னை பாலே.

அருள் மழை பொழியும் அன்னை
அயலவர் வாழ்வு கால
காரிருள் அகல நாளும்
காத்திடும் கண்ணகித்தாய்
பேரருள் பெருமானாரின்
பெட்புறு பாகம் மேவும்
சீரருட் சிவனார் தேவி
செகமெலாம் காக்கும் அன்னை
தாரகை அசுபதிப்போர்
தையலாள் தொழுத அன்னை
கூரிருள் அகல எம்மை
குறை விலா தென்றும் காப்பாள்.

— சிவநெறிச் செல்வர் சி. பாலகுருநாதன்

0 0 0 0 0

## எழில் மாவை வரு மு ரு க னே!

தேவாதி தேவனே செந்தமிழ்க் குருபரா
திருமுருக சரவண பவா
பாவாணர் களிகொளப் பன்னிருகை யாவருள்
பாலிக்கு மாறுமுகனே
மாவாக வருசூரை மாய்த்த வடி வேலவா
மயிலேறி வருமழகனே
ஓவாது சரவண பவா வென் றுரைக்கிறே
முற்றபகை நீக்கி யருள்வாய்!

அன்பர்க்கி ரங்கியெல் லாநன்மை யும்புரிந்
தாண்டருள் புரியுமையா
வின்பந் தருந்தேவ ரிடரொழித் திட்டநீ
யெம்மே லிரங்க விலையோ
துன்பங் கொள் மாருதப் புரவல்லி யின்பமிகு
தூயதல மேவு குமரா
வென்பிங் க ணுருகினேம் பன்னிருக ணையனே
யெழில் மாவை வருமுருகனே.

— கவிஞர் நா. ஆறுமுகம்

### யாழ். மாவட்டத்தில் பனம் பொருள் ஆராய்ச்சி நிலையம்:

# உலக விவசாய நிறுவனம் ரூபா 60 லட்சம் நிதி உதவி!

## கலாநிதி மோகனதாஸ் தகவல்

(பண்டத்தரிப்பு)

''பனம் பொருள் ஆராய்ச்சி நிலையம் ஒன்றை பனம் பொருள் அபிவிருத்திச் சபை யாழ் மாவட்டத்தில் நிறுவ நடவடிக்கை மேற் கொண்டு வருகின்றது. இந்த ஆராய்ச்சி நிலையத்தை அமைப்பதற்கு 60 இலட்சம்ரூபா நிதிஉதவிவழங்க ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் உலக விவசாய நிறுவனம் முன்வந்துள்ளது''.

சித்தன்கேணி கணேசவித்தியாலயத்தில் நடைபெற்றபனம் பொருள் உற்பத்தி பற்றிய கருத்தரங்கில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் பனம் பொருள் அபிவிருத்திச் சபையின் பொது முகாமையாளர் கலாநிதி எஸ். மோகனதாஸ் இதனை தெரிவித்தார்.

வலி மேற்கு உதவி அரசாங்க அதிபர் திரு. து. வைத்திலிங்கம் தலைமையில் நடைபெற்ற இக் கருத்தரங்கில் கலாநிதி. மோகனதாஸ் மேலும் தெரிவித்ததாவது.

''பனம் பழத்திலிருந்து இப்போது பெறப்படும் பொருட்களை நவீனப்படுத்த வேண்டியது அவசியமான தொன்றாகும். பனாட்டு, பனம் ஜாம் ஆகியன பழுது படாது நீண்ட காலம் வைத்திருப்பதற்கு இந்த ஆராச்சிகள் உதவும் இங்கிருந்து தரமான பனம் பொருட்களை ஏற்றுமதி செய்வதற்கும் இந்த ஆராய்ச்சிகள் அவசியமானதாகும். இவ்வருட இறுதிக்குள் நிறுவப்படவிருக்கும் இந்த ஆராய்ச்சி நிலையத்தில் வெளிநாட்டு தொழில் நுட்ப வியலாளருடன் உள்ளூர் தொழில் நுட்பவியாலாளரும் கடமையாற்றுவார்கள்.''

# "தலையை துணியால்மூடி தூக்கிச் சென்றனர்"

## சங்குவேலி கொலைவழக்கில் சாட்சியம்

(மாவிட்டபுரம்)

''சம்பவதினம் இறந்தவரை நான்கு எதிரிகளும் சேர்ந்து அவரது தலையை துணியால் மூடிதூக்கிச் செல்வதைக் கண்டேன். அவர் திமிறிப் பறிக்க முயன்றபோதும் எதிரிகள் அவரை விடவில்லை. மறுநாள் காலை இறந்தவர் பனைவடலிக்குள் சடலமாகக் கிடப்பதைக் கண்டேன்''

இவ்வாறு, சங்குவேலிவடக்கு கொலை வழக்கில் சாட்சியமளித்த இறந்தவரின் மைத்துனர் முத்தையா வரதராசா கூறினர்.

சங்குவேலி வடக்கைச் சேர்ந்த தம்பு சந்திரகாசன் என்பவரை பொல்லால் அடித்துக் கொலை செய்ததாக நல்லையா கனகரத்தினம், நல்லையா. செல்வராசா, கணபதிப்பிள்ளை நல்லையா, நல்லையா பெண்ணையல் நாயகி ஆகியோர் மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

மல்லாகம் நீதிமன்றத்தில் இவ்வழக்கு விசாரணைக்கெடுக்கப்பட்ட சமயம் இறந்தவரின் மைத்துனர் முத்தையா வரதராசா மேலும் சாட்சியமளிக்கையில் கூறியதாவது:

''சம்பவதினம் நான் வெற்றிலை வாங்க அன்னம் கடைக்குச் சென்றுகொண்டிருந்தேன். அப்போது இறந்தவரும் சைக்கிளில் வந்துகொண்டிருந்தார். இறந்தவர் சங்குவேலிப் பிள்ளையார் கோவிலடியில் நிற்க நான் கடைக்குப் போனேன். அப்போது ''ஐயோ விடுங்கோ'' என்று சத்தம் கேட்டது. நான் ஓடி வந்தேன். நான்கு எதிரிகளும் இறந்தவரின் தலையை துணியால் மூடி தூக்கிக்கொண்டு போனுர்கள். நான் சைக்கிளை எடுத்துக் கொண்டு இறந்தவரின் தந்தையின் வீட்டுக்குச் சென்றேன். அவர் வழியில் வந்தார் நடந்ததை அவரிடம் கூறினேன். மறுநாள் பனை வடலிக்குள் இறந்தவரின் சடலம் கிடக்கக் கண்டு அடையாளம் காட்டினேன்'' என்றுர்.

இறந்தவரின் தந்தை கணபதிப்பிள்ளை தம்பு சாட்சியமளிக்கையில் கூறியதாவது;

''சம்பவதினம் நான் வேலையால் வீடுதிரும்பிய சமயம் வழியில் வரதராஜா என்னைக் கண்டு இறந்த என்மகனை எதிரிகள் கொண்டு சென்றுள்ளதாக கூறினுர். நான் எதிரிகள் வீட்டுப்பக்கம் சென்றேன். இறந்தவர் ''அண்ணை அடியாதே'' என்று சத்தமிட்டது கேட்டது. நானும் அங்கு போனுல் எனக்கும் அடிவிழும் என்று கருதி நான் சுன்னுகம் பொலிஸ் நிலையத்திற்குச் சென்று சம்பவம் பற்றிக் கூறினேன். பொலிசார் வந்து எதிரிகள் வீட்டில் இறந்தவரைத் தேடினர். அங்கு அவரைக் காணவில்லை.

மறுநாள் பனை வடலிக்குள் அவரது சடலம் கிடக்கக் காணப்பட்டது. 3-ம் எதிரி எனது அண்ணனுவார். அவரது மகளை எனது மகன் கூட்டிச்சென்று எங்கேயோ வைத்திருந்ததிலிருந்து தகராறு ஏற்பட்டது. 4, 5 வருடங்களாக எமக்கும் எதிரிகளுக்கும் தகராறு இருந்தது என்றுர்.

மேல்விசாரணை ஒத்திவைக்கப்பட்டது:

எதிரிகள் சார்பில் சட்டத்தரணிகள் ஆர். ஜே. செல்வரத்தினம், கே. விஜேந்திரா, ரி. பாக்கியநாதன் ஆகியோர் ஆஜராகினர். சுன்னுகம் பொலிஸ் கான்ஸ்டபிள் திரு. செல்லத்துரை வழக்கை நடத்தினர்.

# இன்றைய பலன்

மாதம்: ஆடி
திகதி: 2 (1984-07-17)
வாரம; செவ்வாய்
திதி: சதுர்த்தி பிற்பகல் 12-59 ன் மேல் பஞ்சமி
நஷத்திரம்: சதயம் பிற்பகல் 2-53 ன்மேல் பூரட்டாதி

மேடம்: குடும்பத்தில் குறை கேட்க நேரிடும் சிலருக்கு விரக்தி மனப்பான்மை தோன்றும் பொறுமையுடன் நடந்து கொள்வது நன்று

இடபம்: இறை வழிபாடு மேலோங்கி நிற்கும் இதயத்தில் அமைதியும் ஏற்படும் முதியவர் ஒருவர் தக்கசமயத்தில் உங்களுக்கு ஆதரவு தருவார்.

மிதுனம்: இலட்சிய பாதையை நோக்கி பயணம் இன்று ஆரம்பமாகும் எதிர் பார்த்த பொருள் வரவும் கிடைக்கலாம் இன்று தாராளமான நாள்.

கடகம்; நண்பர்களுடன் கருத்து வேற்றுமை உருவாகும் வியாபாரிகளாயின் பங்காளிகளுடன் பகைத்துக் கொள்ள வேண்டாம் பொருட் செலவும் உண்டு.

சிங்கம்: எதிர் பாராத இன்பம் இன்று உங்களை அணைத்துக் கொள்ளும். ஆரம்பத்தில் முட்டுக்கட்டை போட்டவர்கள் ஆதரவு கொடு பார்கள் காதல் ஜோடிகளுக்குப் பொன்னுன தினம்.

கன்னி: சூழ்நிலையில் நல்ல மாறுத்ல் தென்படும் அமைதியான வாழ்க்கையுடன் தெய்வத்தின் அருளும் தாராளமாகக் கிடைக்கும் தொழில் துறையில் பாராட்டுக்கள் உண்டு.

துலாம்: இதயத்தை தொடரும் சம்பவங்கள் இன்று நடக்கலாம் சிலருக்கு வாகனத்தில் புதிய முதலீடு செய்யும் சந்தர்ப்பமும் ஏற்படலாம்

விருச்சம்: குடும்பத்தில் மகிழ்சசி தோன்றும் செலவினங்கள் கட்டுப்படியாகவே இருக்கும் களஸ்திரவழியால் இலாபம் கிடைக்கலாம்.

தனுசு: எதிலும் அவசரக் கோலம் தென்படும் சகோதர வழியால் சஞ்சலத்துக்கு இடமுண்டு, எதிர்பார்த்த வரவுகள் தடைப்படக்கூடும் இளமை நினைவுகள் வேதனைத்தரும்.

மகரம்; தவறுகள் நடக்கலாம் நிலையும் தடுமாறும் நண்பர்களே காலைவாரிவிடக்கூடும் சிலருக்கு அன்னிய வாசம் ஏற்படலாம் அவதானம் வேண்டும்.

கும்பம்: அவசரக் கோலம் சிக்கலைத் தோற்றுவிக்கும் மனதில் விரக்தி தென்படும் சகோதரவழியால் சஞ்சலத்திற்கும் இடமுண்டு.

மீனம்: நடையில் தயக்கம் ஏற்படும் உங்கள் விடயத்தில் இன்று உண்மையும் ஊமையாகிவிடும். உடல் நலம் சிறிது பாதிக்கப்படலாம்.

திருமலை
வே. ரவீந்திரன்

## ரூபவாஹினியில் இன்று

மாலை

| | |
|---|---|
| 5-30 | சிறுவர் நிகழ்ச்சி (ஆங்கிலம்) |
| 6-00 | சிறுவர் நிகழ்ச்சி (சிங்களம்) |
| 6-30 | 'வாடைக்காற்று' தமிழ்த் திரைப்படத் தொடர்ச்சி |
| 6-55 | செய்திகள் (தமிழ்) |
| 7-15 | விவரச்சித்திரம்(தமிழ்) |
| 7-45 | 'கோட்ரெட்' (ஆங்கிலம்) |
| 8-15 | செய்திகள் (சிங்களம்) |
| 8-35 | 'கோட்ரெட்' தொடர்ச்சி. |
| 9-00 | 'டிபரன்ற்ஸ்ரோஸ்' (ஆங்கிலம்) |
| 9-30 | செய்திகள் (ஆங்கிலம்) |
| 9-50 | 'பிக்வலி' (ஆங்கிலம்) |
| 10-30 | உலகச் செய்திகள் |
| 10-35 | 'பிக்வசு'தொடர்ச்சி. |
| 10-55 | நிகழ்ச்சிகள் முடிவு. |

## இடமாற்றம்

[பண்டத்தரிப்பு]

பண்டத்தரிப்பு அரசினர் கிராமிய வைத்தியசாலைப் பொறுப்பதிகாரி செல்வி மனோகரி அற்புதநாதன் அநுராதபுரம் அரசாங்க வைத்தியசாலைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். இவரின் இடத்திற்கு அநுராதபுரம் அரசாங்க வைத்தியசாலையில் கடமையாற்றிய செல்வி எஸ். தருமராசா இடமாற்றம்பெற்றுள்ளார்.

### ஈச்சமோட்டையில் எழுந்தருளும்

# ஞானவைரவர்

யாழ் நகரில் புகழ் பெற்று விளங்கும் வயிரவர் கோவில்களில் ஈச்சமோட்டை ஞானவைரவர் கோவிலும் ஒன்றாகும். ஐம்பதுவருடங்கள்பழமை வாய்ந்த இவ்வாலயம் ஆரம்பத்தில் மிகவும் சிறிய ஓர் குடிசையில் ஆரம்பமானது. பின் படிப்படியாக வளர்ச்சி அடைந்து, அக்குடிசை கோவிலாக உருப்பெற்றது. அடியார்களின் விடாமுயற்சியினுல் சிறிய ஓர் நிலப்பரப்பில்ஆரம்பமான இக் கோவில் சென்ற ஆண்டு முற்றாக புதிய கட்டடம் கட்டப்பெற்று கும்பாபிஷேகம் நடைபெற்றது. இப்போது கோவில் மிகவும் அழகிய சிற்பங்களுடன் கூடியதாக ஈச்சமோட்டை ஊரின் மத்தியில் கம்பீரமாகக் காட்சி கொடுக்கின்றது. இக் கோவிலின்வளர்ச்சிக்குஇங்குள்ளமெய்யடியார்களுடன் சுண்டிக்குளி 'சைவமகாசபை'யினரும் அரும்பாடுபட்டு வருகின்றனர். தற்போதைய நிர்வாக சபையினரின் முயற்சியால் வெள்ளிக்கிழமைகள் தோறும் சிறுவர்களுக்கு பண்ணிசை வகுப்புகள் நடைபெறுகின்றன. இப் பண்ணிசை வகுப்புகளுக்கு யாழ் திவ்விய ஜீவன சங்கத்தினர் உதவி புரிந்து வருகின்றனர். அத்துடன் விவேகானந்த சபையினரால் வருடா வருடம் நடாத்தப்படும் சமய அறிவுப் பரீட்சைக்கு மாணவர்களுக்கு பயிற்சிஅளித்துப் பரீட்சைக்கு தோற்றுவிக்கின்றனர்.

கடந்த இரு வருடங்களாக ஆலய கட்டிட வேலைகள் நடைபெற்றதால் நடைபெறுமல் இருந்த அலங்கார உற்சவம் இம்முறை மிகவும் கோலாகலமாக கடந்த புதன்கிழமை ஆரம்பமாகி பன்னிருதினங்களுக்கு நடைபெற்று இறுதி நாளாகிய 22ந் திகதி மாலை சுவாமி வெளிவீதி உலாவருவதுடன் முடிவடையும்.

ச. தவசீலன்

# "கிராமங்களே நாட்டின் முதுகெலும்பாகவுள்ளன"

(ஊரெழு)

''ஒரு கிராமத்தின் முன்னேற்றம் அங்குள்ள மக்களின் கையில்தான் தங்கியிருக்கிறது. எனவே, பொதுமக்கள் அனைவரும் பிரிவினையின்றி தங்களுக்குள் ஒற்றுமையாக வாழ்வதன் மூலம் எவ்வளவோ பெரும் காரியங்களைச் சாதிக்கமுடியும். கிராமங்கள்தான் நாட்டின் முதுகெலும்பு. அந்த வகையில் கிராமங்கள்தோறும் சனசமூக நிலையங்கள் இயங்கி வருவதனுல், மக்கள் மத்தியில் நல்லறிவும், நல்லொழுக்கமும் வளருவதுடன், அவர்களை சமுதாயம் போற்றும் நற்பிரஜைகளாகவும் திகழச்செய்கிறது.''

இவ்வாறு குப்பிளான் தெற்கு கலைவாணி சனசமூக நிலையத்தின் இரண்டாவது ஆண்டுவிழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றிய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. எஸ். எஸ். அன்ரன் அல்பிரட் கூறினுர்.

மேற்படி சனசமூக நிலையத் தலைவர் திரு. பொ. கந்தையா தலைமையில் நடைபெற்ற ஆண்டுவிழா நிகழ்ச்சிகளை தொழிலதிபர் திரு. க. கனகராசா மங்கள விளக்கேற்றி ஆரம்பித்துவைத்தார்.

விழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட முன்னுள் மானிப்பாய் பாராளுமன்றஉறுப்பினர் திரு வி. தருமலிங்கம் பேசுகையில் ''பொதுமக்கள் தங்கள் இரண்டு கண்களைப் போல சனசமூக நிலையங்களைப் பேணவேண்டும். ஏனெனில், அறிவென்னும் ஒளியூட்டி வழிகாட்டும் சாதனமாக சனசமூக நிலையங்கள் விளங்குகின்றன. குறிப்பாக இந்த கலைவாணி சனசமூக நிலையம் கிராம அபிவிருத்தியில் ஆற்றிவரும் பங்களிப்பு சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது என்று கூறினுர்.

குப்பிளான் சைவமகாசபை செயலாளரும், ஆசிரியருமான திரு சிவ. மகாலிங்கம் பேசுகையில், ''வாசிப்பு முழு மனிதனை உருவாக்குகிறது. என்பது அறிஞர் கருத்து. எல்லோரும் பத்திரிகைகளை வாசித்து புதினங்களை அறிய வேண்டும். கிராமங்கள் தோறும் இவ்விதமான சனசமூக நிலையங்கள் இருப்பதனுல் அவ்வப்பகுதி மக்கள் தங்கள் அறிவை வளர்த்துக் கொள்ளுவதுடன், அங்கே நல்ல சமுதாயம் ஒன்று உருவாகக் கூடியதாகவும் இருக்கிறது'' என்றுர்.

மேற்படி சனசமூக நிலையத்தின் போஷகர் திரு த. தருமலிங்கம் வரவேற்புரை நிகழ்த்தினுர். நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் திரு ஆ. மகாலிங்கம், ஏழாலை அபிவிருத்தி உப அலுவலகத்தைச் சேர்ந்த திரு த. ஈஸ்வரலிங்கம், குப்பிளான் சைவமகாசபைத் தலைவர் திரு க-வைரவநாதன், கலைவாணி சனசமூக நிலைய உப தலைவர் திரு. ஏ. ஸி. அந்தோனிப்பிள்ளை உட்பட மற்றும் பலர் விழாவில் கலந்து கொண்டு உரையாற்றினுர்கள்:

விழாவின் இறுதியில் கலை நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன.

## உயர்தர வகுப்பை ஆரம்பிக்க கோரிக்கை

(மாவிட்டபுரம்)

''மாவிட்டபுரம், வீமன் காமம், தையிட்டி, மயிலிட்டி பகுதியில் உள்ள மாணவர்கள் உயர்கல்வி வாய்ப்புப்பெறும் வகையில் வீமன்காமம் மகா வித்தியாலயத்தில் உயர்தர வகுப்பை மீண்டும் ஆரம்பிக்க வேண்டும்.''

இவ்வாறு கோரும் தீர்மானம் ஒன்றை மேற்படி வித்தியாலய அபிவிருத்திச் சங்கம் நிறைவேற்றியுள்ளது.

மேற்படி வித்தியாலய அபிவிருத்தி சங்க வருடாந்தக் கூட்டம் வித்தியாலய அதிபர் திரு. மு. சிவராசா தலைமையில் நடைபெற்றபோது மேற்படி வித்தியாலயத்தில் நடைபெறும் க. பொ. த. (உயர் தர) வகுப்பு இவ்வருடத்துடன் நிறுத்தப்படுவதை கண்டித்து சிறந்த பெறுபேறு பெற்ற இவ்வித்தியாலயத்தில்தொடர்ந்துஉயர்தரவகுப்பை நடாத்த அனுமதி வழங்கும்படி கல்வி இலாகாவைக் கேருவதென முடிவாகியது.

மேற்படி விழாவில் பிரதம விருந்தினராக வட்டார வித்தியாதிகாரி திரு. பொ. சிவஞானசுந்தரம் கலந்துகொண்டார்.

## பாராட்டு விழாவும் மலர் வெளியீடும்

(சுழிபுரம்)

சைவமணி, சித்தாந்தச்செம்மல் வித்துவான் மு. சபாரத்தினம் அறுபது வயது வரைஆசிரியசேவையாற்றி இளைப்பாறுவதை யொட்டி அவரது சேவையைப் பாராட்டு முகமாகக் காரைநகர்ப் பொதுமக்கள், ஸ்தாபனங்கள் அனைவரினதும் சார்பில் பாராட்டு விழா நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றது. இப் பாராட்டு விழாவை யொட்டி மலர் ஒன்றும் வெளியிடப்படவுள்ளது. இதற்காக ஓர் குழு தெரிவு செய்யப்பட்டுள்ளது.

### கிளிநொச்சி உதயநகரில்

# குடியேறியவர்களை வெளியேற்றும் நடவடிக்கையை நிறுத்தவும்!

(கிளிநொச்சி)

கிளிநொச்சி உதயநகரில் கடந்த 10ஆண்டுகளுக்கு மேலாக குடியேறி வசித்துவரும் மக்களை வெளியேற்ற எடுக்கும் நடவடிக்கையை நிறுத்துமாறு கோரும் மகஜர் ஒன்றை கிளிநொச்சி மாவட்டக் காணி அதிகாரி திரு பத்மநாதனிற்கு உதயநகர் கிராம முன்னேற்ற சங்கத்தினர் அனுப்பி வைத்துள்ளனர்.

பிரஸ்தாப சங்கம் சார்பில் உதயநகர் கிராம முன்னேற்றச் சங்கத் தலைவர் திரு ச. கோபால், செயலாளர் த. இமைபாலன் ஆகியோரால் அனுப்பிவைக்கப்பட்டுள்ளஇம் மகஜரில் ''உதயநகரில் மக்கள் குடியேறி 10 ஆண்டுகளுக்கு மேலாகிறது. அவ்வாறு வசித்து வருவோர் காடுகளை அழித்து நிரந்தரப் பயிர்களை உண்டாக்கி வீடுகளைக் கட்டி வசித்து வரும் இவ்வேளை இக் காணிகள் யாழ். பல்கலைக் கழகத்திற்குரியது எனவும் வெளியேற்ற நடவடிக்கை எடுக்கப் படுவதாகவும் குறிப்பிட்டுள்ளது எமக்கு சொல்லொணுத் துயரத்தை அளித்துள்ளது.

''நாம் இங்கு காடுகளை அழித்து குடியேறிய போது காடு வெட்டிய குற்றத்திற்காக எமக்கு நீதிமன்றத்தில் தண்டப் பணம் அறவிடப்பட்டது. ஆனுலும் நீதிமன்றம் எம்மை வசிக்கும் காணிகளில் இருந்து வெளியேறுமாறு கோரவில்லை. அதேபோல் எந்த அதிகாரிகளும்எம்மை வெளியேற்ற எடுக்கும் நடவடிக்கை அநீதியானது. இதை எமது சங்கமும் இங்கு வாழும் மக்களும் வன்மையாக கண்டிக்கின்றனர். என்று காணிஅதிகாரிக்கு அனுப்பி வைக்கப்பட்ட மகஜரில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

## அன்பளிப்பு

(சாவகச்சேரி)

அறவழிப் போராட்டக் குழுவின் நூலகத்திற்கு ஆசிய பவுண்டேசன் நிறுவனத்தினர் சுமார் 10,000 ரூபாய் பெறுமதியான நூல்களை அன்பளிப்புச் செய்துள்ளனர்.

## அடையாள வேலை நிறுத்தம் வெற்றி

(கிளிநொச்சி)

கூட்டுறவு ஊழியர் தொழிற் சங்க அடையாள வேலை நிறுத்தம் பரந்தன் கிளைப் பகுதியில் பெரு வெற்றியை அளித்துள்ளதாகவும் கரைச்சி வடக்கு பலநோக்கு கூட்டுறவு சங்கத்தில் கடமையாற்றும் 75ஊழியரும் வேலை நிறுத்தத்தில்பங்குபற்றியதாகவும் ஊழியர்தந்த பேராதரவுக்கு தாம் நன்றி தெரிவிப்பதாகவும் கூட்டுறவு ஊழியர் தொழிற்சங்க பரந்தன் கிளை தலைவர் வே.தெய்வேந்திரன். செயலாளர் நா. பாலசுப்பிரமணியம் ஆகியோர் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளனர்.

## வெளிநாடு செல்வதில் ஏமாற்றமடைந்தவர் தற்கொலை

(மாவிட்டபுரம்)

வெளிநாடு செல்வதற்கு பணம்செலுத்தி ஏமாற்றமடைந்த 24 வயது இளைஞன் ஒருவன் தன்குடும்பத்தை காப்பாற்ற முடியாத நிலையில் நஞ்சிடம் தஞ்சம்புகுந்து மரணமான சம்பவம் ஒன்று கீரிமலையில் இடம்பெற்றுள்ளது.

கீரிமலையைச் சேர்ந்த வைரமுத்து சூரியகுமார் என்னும் 24 வயதுடைய இளைஞனே இவ்வாறு மரணத்தை தழுவியவராவார்.

இவரின் மரணம் சம்பந்தமாக தெல்லிப்பளை திடீர் மரணவிசாரணை அதிகாரி என். தம்பிராசா விசாரணை நடாத்தியபோத இறந்தவரின் தாயார் தங்கம்மா சாட்சியம் அளித்தார்.

''என் கணவர் இறந்தபின் என் 3 பெண் குழந்தைகளையும் ஒரு ஆண்பிள்ளையையும் காப்பாற்றும் பொறுப்பு இறந்த என்மகனிடம் இருந்தது. இவருக்கு வேலை ஒன்றும் இல்லை. இவர் வெளிநாட்டுக்கு போவதற்காக 2 ஏஜென்சிகளிடம் பணம்கட்டியிருந்தார். ஆனுல் அவர்கள் ஏமாற்றத்தால் விரக்தியடைந்திருந்தார். சம்பவதினம் ஒரு ஏஜன்சிகாரனிடம் சென்று பணம்கேட்கப் போனுர். பின் திரும்பிவந்து சொற்பநேரத்தில் வீட்டுக்கு திரும்பி தான் நஞ்சுகுடித்துவிட்டதாகத் தெரிவித்தார். தெல்லிப்பளை ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டபோது அங்குமரணமானுர்'' என்ருர்.

மரணவிசாரனை அதிகாரிதற்கொலைஎன தீர்ப்பு வழங்கினுர்.

## கண்காட்சி

[வவனியா]

வவனியா இறம்பைக்குளம் மகளிர் மகாவித்தியலயத்தில் நடந்த கற்றல், கற்பித்தல் பாடநெறி தொடர்பான கண்காட்சியைப் பலர் கண்டுகளித்தனர்.

சித்திர வடிவிலான இக்கண்காட்சியினை வவனியா பிரதேச கல்விப் பணிப்பாளர் திரு. சி. பொ. சிவபாதம் திறந்து வைத்தார்.

திறப்பு விழா வைபவத்தில் வடாரக கல்வி அதிகாரிகளும், பெரும் திரளான பெற்றோர்கள், மாணவ, மாணவிகளும் கலந்து சிறப்பித்தனர்.

விழாவிற்கு வருகைதந்த பிரமுகர்களை இறம்பைக்குளம் வித்தியாலய மாணவிகள் கோலாட்டம் அடித்து வரவேற்றனர்.

சுமார் 25 பாடசாலைகளின் கண்காட்சி சித்திரங்கள் இங்கு காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன.


## முடிவு திகதி பின்போடப்பட்டது

## இரசிகமணி கனக செந்திநாதன் நினைவுக் குறுநாவல் போட்டி

★ 1-ம் பரிசு ரூபா 500-00

★ 2-ம் பரிசு ரூபா 300-00

★ அமரர் இரசிகமணி கனக செந்திநாதன் அவர்களின் நினைவாக யாழ். இலக்கிய வட்டமும் 'ஈழநாடு'ம் இணைந்து நடத்தும் இக் குறுநாவல் போட்டியில் எழுத்தாளர்கள் எவரும் கலந்து கொள்ளலாம்.

★ ஆக்கங்கள் தமது சொந்தப் படைப்புக்கள் என உறுதிப்படுத்தப் பட்டிருக்க வேண்டும்.

★ தாளின் ஒருபக்கத்தில் மட்டும் (புல்ஸ்காப்) 30 முதல் 80 பக்கங்களுக்கு மேற்படாதிருக்க வேண்டும்.

★ உறையின் இடது மேல் மூலையில் 'இரசிகமணி கனக செந்திநாதன் நினைவுக் குறுநாவல் போட்டி' எனக் குறிப்பிடவும்.

எழுத்தாளர்கள் தங்கள் குறுநாவலை 15-8-84 திகதிவரை அனுப்பலாம்.

★ அனுப்பவேண்டிய முகவரி :

இரசிகமணி குறுநாவல் போட்டி
ஈழநாடு வாரமலர்,
த. பெ. எண் : 49,
யாழ்ப்பாணம்.


## கால் இறுதிப் போட்டி: ஜொலி ஸ்ரார்ஸ் கழகம் வெற்றி

(யாழ்ப்பாணம்)

'ஜொலி ஸ்டார்ஸ்' வெற்றிக் கிண்ணத்துக்கான கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் 'சென்ரலைட்ஸ்புளூ' விளையாட்டுக்கழகத்துக்கும்,, ஜொலிஸ்ரார்ஸ் விளையாட்டுக் கழகத்துக்குமிடையே நிகழ்ந்த கால் இறுதி ஆட்டத்தில் ஜொலிஸ்ரார்ஸ் கழகம் வெற்றியீட்டியது.

இம்மட்டுப்படுத்தப்பட்ட கிரிக்கெட் போட்டி கடந்த வியாழக்கிழமை யாழ். இந்துக்கல்லூரி மைதானத்தில் ஆரம்பமானது. யாழ். இந்துக் கல்லூரி அதிபர் திரு. எஸ். பொன்னம்பறம் இச் சுற்றுப்போட்டியை ஆரம்பித்துவைத்து வைத்தார்.

ஜொலிஸ்ரார்ஸ் விளையாட்டுக் கழகம் 9 விக்கட்டுகள் இழப்பிற்கு 147 ஓட்டங்கள் என்ற ரீதியில் சென்ரலைட்ஸ் புளூ கழகத்தை வென்றது.

இக்கால் இறுதிப்போட்டியின் இரண்டாம் கட்ட ஆட்டம் யங் பட்றீசியன் கழகத்துக்கும், யாழ்ப்பாணக் கல்லூரி ஓல்ட் கோல்ட்ஸ் கழகத்துக்குமிடையே நடந்தது. இதில் யாழ்ப்பாணக்கல்லூரி ஓல்ட் கோல்ட்ஸ் கழகம் 9 விக்கட்டுகள் இழப்பிற்கு 151 ஓட்டங்கள் என்ற ரீதியில் இடம்பெற்றது,

# "கச்சாயில் மீண்டும்" சங்கு குளிக்கும் தொழில்"

### உதவி அரச அதிபர் தகவல்!

[மட்டுவில்]

''கச்சாய்ப் பகுதியில் சமூக, பொருளாதார வளத்தின் அத்திபாரமாக இருந்து வந்தது சங்குகுளிக்கும் தொழிலாகும்.

இது அக்கிராமத்தின் பாரம்பரியத் தொழில் இடையில் கைநழுவவிடப்பட்டு, அழிந்து போன இத்தொழில் மீண்டும் புனரமைப்புச்செய்யப்பட்டும். இதற்கென இந்த ஆண்டு பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்டத்தின் கீழ் 10 ஆயிரம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. கடற்கரையை அண்டிய கச்சாய்ப் பகுதி கிராமங்களில் சங்கு குளிக்கும் தொழிலை, மீண்டும் நவீன முறையில் அபிவிருத்தி செய்வதன் மூலம் அப்பகுதி சமூக, பொருளாதார வளத்தில்உச்சக்கட்டத்தை அடைவதோடு, அப்பகுதி மக்களின் வேலையில்லாப் பிரச்னைக்கும் முற்றுப்புள்ளிவைக்கப்படும்.''

இவ்வாறு தென்மராட்சிப் பிரிவு உதவி அரசாங்க அதிபர் திரு. கே. துரைராஜா நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

உதவி அரசாங்க அதிபர் திரு. துரைராசா மீண்டும் இதுபற்றி விளக்கமளிக்கையில் கூறியதாவது:-

''ஒவ்வொரு கிராமத்திலும், அதன் சூழ்நிலை, இயற்கை வளங்களுக்கேற்ப பரம்பரை, பரம்பரையாக ஒரு முக்கிய தொழில் காணப் படுகின்றது.

சில இடங்களில் சில காரணங்களினுல் அது இடையில் கைநழுவவிடப்பட்டு அற்றுப் போவதுண்டு. அவற்றின் சுவட்டைத் தேடிப்பிடித்து, அத்தொழிலை மீண்டும் நவீன முறையில் புனரமைப்புச் செய்வதின் மூலம். மீண்டும் மக்கள் மத்தியில் பொற்காலத்தை ஏற்படுத்தலாம் என்பது எனது நம்பிக்கை. இன்று முன்னேற்றமடைந்துள்ள நாடுகளின் அடிப்படைக் கொள்கையும் இதுதான்.

''கச்சாய்ப் பகுதியில் கெற்பேலி, பாலாவி போன்ற கிராமங்கள் கடற்கரையை அண்டியுள்ளவை. இவை சங்கு குளிக்கும் தொழிலில் சரித்திரப் பிரசித்திபெற்றவை. ஏதோ காரணமாக, இத்தொழில் இடையில் கைவிடப்பட்டு பூரணமாக ஒதுங்கிவிட்டது. அதை நான் மீண்டும் நவீன முறையில் புனரமைப்புச் செய்து கச்சாப்பகுதியின் பொற்காலத்தை உருவாக்கவே 10ஆயிரம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்துள்ளேன்.

கடந்த காலங்களைப் போலன்று இப்பொழுது மேல் நாடுகளில் சங்குகளுக்கு நல்ல கிராக்கியுண்டு. அதி முக்கிய கைத்தொழில்களின் மூலப் பொருள் சங்கை மேல்நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதின் மூலம் பெருந்தொகையான, அந்நிய செலாவணியைச் சம்பாதிக்க முடியும்'' என்ருர்.

(கி)

## சுகாதார வார விழா

[புங்குடுதீவு]

புங்குடுதீவு பொது சுகாதாரப் பரிசோதகர் பிரிவில் சுகாதார வாரவிழா ஸ்ரீசுப்பிரமணிய மகளிர் வித்தியாலய மண்டபத்தில் வைத்திய கலாநிதி கிருஷ்ணதாஸ்தலைமையில் நடைபெற்றது.

இவ்விழாவில் புங்குடுதீவு அரசினர் வைத்தியசாலை மாவட்ட வைத்திய அதிகாரி ரி. யோகேந்திரராசா, ஊர்காவற்றுறை உதவி மாவட்ட வைத்திய அதிகாரி செல்வி கே. லலிதாம்பிகை, வைத்திய கலாநிதி ஆ. கோபாலகிருஷ்ணன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகச் சமுகமளித்திருந்தனர்,

## நூல் விமர்சனம்

நூல்: அரியவும் பெரியவும் (பெரியபுராணச் சிந்தனைகள் முதலாம் பாகம்)
வெளியீடு: துர்க்காதேவி தேவஸ்தானம் தெல்லிப்பழை இலங்கை
ஆசிரியர்; மு. கந்தையா ஏழாலை
விலை: 10ரூபா

பெரியபுராணம் பற்றிய மிகவும் கணிசமான தரமான நூல் இது. நூலாசிரியர் வெளியீட்டாளர் ஆசியுரை- வாழ்த்து- மதிப்புரை- அணிந்துரை என்பன வழங்கிய பெருமகனின் தகுதியை அறிந்தவர்கள் இந்நூலை வாசித்துவிடும் நூலென்று கருதாது போற்றி வாசித்து வைத்திருக்க வேண்டியநூல் என்பதை அறிவார்கள்.

இதற்கான ஆசியுரை முதலியவற்றை வழங்கிய ஸ்ரீலஸ்ரீ காசிவாசி முத்துக்குமாரசுவாமித்தம்பிரான்சுவாமிகள்' பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை, திருக்கேதீச்சர திருப்பணிச் சபைத் தலைவரும், சித்தாந்த வித்தகருமாகிய திரு. மு. ஞானப்பிரகாசம், சித்தாந்த பானு வடகோவை சிவஸ்ரீ சோம ஈசானசுப்பிரமணிய சிவாச்சாரியார். ஆகிய அனைவரும் நூலை நன்கு படித்து மனமகிழ்ந்து வழங்கியுள்ள உரைகள் நூலாசிரியரான திரு. கந்தையாவின் கல்வியறிவையும் விவேகத்தையும் தெளிவாக எல்லோருக்கும் புலப்படும் வகையில் நூலெழுதும் ஆற்றலையும் இந்நூலால் நாம் அடையத் தக்கபயனையும் உணரச் செய்கின்றன.

''கொலைக்குற்றமென்ருலும் ஒருவன் அறிவு தெளிவில்லா நிலையிற் செய்திருந்தால் அது மன்னிக்கப்படுகிறது. அறியாத குற்றத்துக்குத் தண்டனை யாண்டுமில்லை... செய்யாத பிழைக்கு மன்னிப்பு வேண்டுவார் யாருமிலர். இதற்கு நேர் மாருனதொன்று அமர் நீதியார்நிலை. இவ்வாருன தொடக்கத்துடன் 'சிறிய என் பெரும் பிழை பொறுத்தருள் செய்வீர்'' என்றும் கட்டுரை தொடங்குகிறது.

''காளத்தியான் அவனென் கண்ணுளானே'' என்ருர் திருநாவுக்கரசு சுவாமிகள் பின்ஞெருகால் அதற்கு முன்னேடியாகவே காளத்தியப்பர் கண்ணப்பர் கண்ணே தம் கண்ணுக இல்லை, கண்ணப்பரேதம் கண்ணுக விளங்க இருந்துவிட்டார்.

''சிவ வேடமே மெய்பொருளெனத் தொழுது வென்ருர்'' என்கிருர் சேர்க்கிழார் என்னை? அந்நிலையிலும் சிவ வேடமே மெய்ப்பொருள் என்ற அவர் உறுதி சரிந்ததில்லை. மற்ருெருவிதமாய்ச் சொன்னுல் முத்தநாதன் வஞ்சனை அவர் கழுத்தைத் தீண்டியதன்றி அவர் உள்ள நிலையைத் தீண்டவில்லை எனலாம். அதுவே அவருக்கு வெற்றி என்பன போல்வருவன பெரிய புராணத்தின் அருமை பெருமைகளைத் தெளிவுறுத்துகின்றன.

மன்னன் வழித்தே மலர் தலை உலகம் எனருர் போல் அறிவும் பக்தியும் கோயிற் பழக்கமும் உடைய துர்க்க துரந்தரியின் பங்களிப்பினுல் - வழி நடத்தலினுல் நடைமுறை உதாரணமாக விளங்கும் துர்க்காதேவி தேவஸ்தானம் சமய நூல்களை வெளியிடுத்தலைப் பாராட்டி அமையாது. அபிஷேகம் அலங்காரம் அர்ச்சனை என்பன விக்கிரக வழிபாடுதல் போன்று சமய நூல்கள் ஞான நூல்களை வெளியிடுதல் ஞான பூசையாகும் என்பதை நடைமுறைப்படுத்தும் தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்த்தானம் இவ்விடயத்தைப் பொறுத்தவரை யாழ்ப்பாணம் முழுவதுக்குமே பெருமை தருவதாய் விளங்குகின்றது.

பண்டிதர்
தி. பொன்னம்பலவாணர்



பிரான்ஸில் சாதனை நிகழ்த்திய ஸ்ரீகாந்தருஜா பிரான்ஸ் கின்னஸ் அதிகாரிகளுடன் காணப்படுகிறார். வலமிருந்து இரண்டாவதா கின்னஸ் புத்தகத்துடன் காணப்படுகிறார் சாதனை வீரர்.

# யாழ். இளைஞர் ஸ்ரீகாந்தருஜா பிரான்சில் நிகழ்த்தியசாதனை

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இளைஞர் பிரான்ஸில் சாதனை நிகழ்த்தியுள்ளார். முன்னர் யாழ். நகரில் ஒற்றைக் காலில் நின்று உலக சாதனை புரிந்து கின்னஸ் புத்தகத்தில் இடம்பெற்ற அ. ஸ்ரீகாந்தருஜாவே பிரான்ஸில் சாதனை செய்த பெருமைக்குரியவர்.

பிரான்ஸில் கின்னஸ் நிறுவனத்தினர் செய்துகொடுத்த ஏற்பாட்டில், இந்தச் சாதனையைச் செய்தார். நாற்பத்திரண்டு கிலோமீட்டர் தூரத்தை முழங்காலில் தவழ்ந்து இந்தச் சாதனையை நிகழ்த்தினார்.

இவர் பிரான்ஸில் நிகழ்த்திய இந்தச் சாதனை உலக சாதனையாகக் கணிக்கப்பட்டு, கின்னஸ் புத்தகத்தில் இடம் பெற்றுள்ளது,

வண்ணை வைத்தீஸ்வரா வித்தியாலயத்தின் பழைய மாணவரான இவர், பாடசாலை நாட்களிலேயே மிகவும் திறமையுள்ள விளையாட்டு வீரராகத் திகழ்ந்தார்.

இலங்கையில் இருந்த சமயத்தில் மற்றும் இருஉலக சாதனை முயற்சிகளை மேற்கொண்டார். 'சிற்அப்ஸ்' என்ற இருந்து எழும்புதலை ஆகக் கூடுதலாகச் செய்து வெற்றிபெற்றுள்ளார். மூன்றாவது உலக சாதனைக்கு முயற்சியைச் செய்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. 4மணி 22 நிமிட நேரத்தில்8,491 தடவைகள் உயர உதைக்கும் சாதனையைச் செய்ய முயன்றதும் குறிப்பிடத்தக்ககது.

அந்தச் சாதனையை இப்போது பிரான்ஸில் செய்து முடிக்கத் திட்டமிட்டுள்ளார். வரும் 22ம் திகதி ஞாயிற்றுக்கிழமை இச் சாதனை முயற்சியை மேற்கொள்வார். முன்னர் 9,100 தடவைகள் உயர உதைக்கும் சாதனையை முறியடிப்பதன் மூலமே இவர் புதிய உலக சாதனையைத் தோற்றுவிக்க முடியும்.

இலங்கையில் உலகசாதனைக் கெல்லாம் தனித்துவமிக்கவராகவும், முன்னோடியாகவும் ஏழு உலக சாதனைகளைக் கின்னஸ் புத்தகத்தில் பதித்தவருமான ஆழிக்குமரன் ஆனந்தனால் பாராட்டும் பரிசும் பெற்றவர் இந்த ஸ்ரீகாந்தருஜா என்பது குறிப்பிடத் தக்கது.

யாழ்ப்பாணத்தில் பிலியட்ஸ் தடியை மேலும் கீழும் 2,520 தடவை உயர்த்துவதன் மூலம் புதிய உலகசாதனையை நிகழ்த்திய விழாவில் ஆழிக்குமரன் யாழ் வீரர்களைக் கௌரவித்தார். அப்போது ஸ்ரீகாந்தருஜாவையும் அழைத்துப் பரிசளித்துக் கௌரவித்தார்.

இப்போது இங்கிலாந்திலிருக்கும் ஆழிக்குமரன் பிரிட்டன்-பிரான்ஸைப் பிரிக்கும் ஆங்கிலக்கால்வாயை நான்கு தடவை நீந்திக் கடந்து உலக சாதனையொன்றை மேற்கொள்ளும் முயற்சியில் ஈடுபட்டுள்ளாரல்லவா! இவரது முயற்சிகளுக்கு சாதனை வீரர் ஸ்ரீகாந்தராஜா பிரான்ஸிலிருந்து உதவ முன்வந்துள்ளார். ஆழிக்குமரன் லண்டனில் இருந்து எழுதியுள்ள கடிதத்தில், ''ஒற்றைக் காலில் நின்று யாழ்நகரில் சாதனை நிகழ்த்திய ஸ்ரீகாந்தருஜா ஆங்கிலக் கால்வாயை நான்கு தடவை நீந்திமுடிக்கும் எனது சாதனை முயற்சிக்குக் கைகொடுத்து உதவ முன்வந்துள்ளார்'' என்று குறிப்பிட்டுள்ளார்.

நமது வீரர்கள் வெளிநாட்டில் சாதனைசெய்து நமக்கெல்லாம் பெருமை தேடித் தருவது, நம்மவர் திறமையை மேலும் உலகறியச் செய்வதாக உள்ளது.

—ராஜகோபால்

## ஊழியர்...

(4ம் பக்கத் தொடர்ச்சி)

ஊழியர்கள் வங்கிக் கிளைகளில் தமக்கு என கணக்குகளை ஆரம்பித்து அதன் இலக்கத்தையும் விபரத்தையும் தமக்கு அனுப்பிவைக்க வேண்டுஎன்று யாழ் பிரதேச மலேரியா தடுப்பு இயக்க பொறுப்பதிகாரி சுற்றறிக்கையொன்றில் தகட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

## மன்னார் மாவட்டத்தில் 50 யுவதிகளுக்கு பயிற்சி!

(மன்னார்)

தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் மன்னார் மாவட்ட அலுவலகத்தின் பெண்கள் சேவைக்கான இடம் மாறுப் பயிற்சித் திட்டத்தின் கீழ் பாலைக்குழி, கபித்தான் குளம் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த 50 யுவதிகளுக்கு விரைவில் பயிற்சியளிக்கப்படவுள்ளது.

மூன்று மாதங்கள் நடைபெறும் இப்பயிற்சியின்போது மனையியல், கைவேலை, தையல் போன்ற பாட நெறிகள் போதிக்கப்படும்.

இப்பயிற்சியின் இறுதியில் சான்றிதழ்களும் வழங்கப்படும்

இப்பயிற்சிக்கு பொறுப்பாக தேசிய இளைஞர் சேவை அதிகாரி திரு. எஸ். கணபதிப்பிள்ளை கடமையாற்றுவார்,

## வித்தியின் மணிவிழா

(யாழ்ப்பாணம்)

பேராசிரியர் சு. வித்தியானந்தனுக்கு மணிவிழா நாளை புதன்கிழமை பிற்பகல் 4 மணிக்கு யாழ். கைலாசபதி அரங்கில் நடைபெறும் யாழ். பல்கலைக்கழகத் தமிழியற் கழகத்தினரும். யாழ். முத்தமிழ் வெளியீட்டுக் கழகத்தினரும் நடாத்தும் இவ்விழாவிற்கு பேராசிரியர் சண்முகதாஸ் தலைமை வகிப்பார். துணைவேந்தர் 'வித்தி' நூல் அறிமுகமும் இடம்பெறும்; பேராசிரியர் வித்தியானந்தனுக்கு திரு. ச, அம்பிகைபாகன் பொன்னாடைபோர்த்தி ஆசியுரை வழங்கிக் கௌரவிப்பார். பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் விழாநடை பெறும்

## கடனுதவி

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு வாவியில் உலக வங்கியின் உதவியுடன் கூனிறால் வளர்ப்பு திட்டமொன்று பரவலான முறையில் மேற்கொள்ளப்படுவதற்கான நடவடிக்கைகளை பிரதேச அபிவிருத்தி அமைச்சு மேற்கொண்டு வருகிறது.

இத்தகவலை பிரதேச அபிவிருத்தி அமைச்சர் திரு. செ. இராசதுரை எமது நிருபரிடம் தெரிவித்தார்.

## சனி, செவ்வாய்...

(4ம் பக்கத் தொடர்ச்சி)

யில் செவ்வாயின் (அவிட்டம்) சாரத்தில் சஞ்சரிக்கும் 18, 19ல் சனியின் (உத்திரட்டாதி) சாரத்திலும் 21ல் சந்திரன் சூரியனுக்கு சதுரப்பார்வையில் உள்ளது. ஜுலை 25ல் செவ்வாயின் (மிருகசீரிடம்) சாரத்திலும் 28ல் சனியின் (பூச) சாரத்திலும் சஞ்சரிக்கிறது. அடுத்து முக்கியமாக ஓகஸ்ட் 10 11, 12இல் சனியின் (மகரம்) சந்திரன் சஞ்சரித்து 12ல் செவ்வாயின் (அவிட்டம்) சாரத்தில் சஞ்சரிக்கிறது.

இவற்றை நோக்கும்போது தமிழ் ஆடிமாதம் (ஜுலை 13 ஓகஸ்ட் 14) நாட்டுக்கு ஒரு சோதனைக்காலமென்றே சொல்லவேண்டும். பொதுவாக உலகரீதியிலும் பாதிப்புக்களைக் காணலாம்.

இக்காலம் தனிப்பட்ட ஒவ்வொருவருக்கும் ஒவ்வொருவித பாதிப்பைக் கொடுத்தாலும் மீனம், இடபம், விருச்சிகம் இராசிகட்கு அதிகபாதிப்பையும், மேஷம். மிதுனம், கடகம், கன்னி இராசிகாரருக்கு அடுத்தகுறைவான பாதிப்பையும் சிங்கம், துலாம், தனுசு, மகரம் இராசியினருக்கு குறைந்தபாதிப்பையும் தரும்.

ஆகையால் சகலரும் இக்காலங்களில் நவக்கிரகங்களுக்கு பிரீதி செய்தும் விசேடமாக சனி, செவ்வாய் கிரகங்களுக்கு அர்ச்சனை செய்துவழிபாடு செய்தலும் நன்மையைக் கொடுக்கும் சனிக்கிரகத்திற்கு எள் ளெண்ணை எரித்தலும் நன்று.

## ஜே.ஆரின்...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

சுவார்த்தை நடத்தினார்.

''ஜனாதிபதி எமது பிரச்னை பற்றி கூடியளவு கதைக்காத போதிலும்கூட அங்குள்ளவர்கள்பற்றி கூடியளவு அக்கறையெடுத்துக் கதைத்துள்ளார். இவர் அவர்களை மீளவும் இலங்கைக்கு அனுப்பவேண்டுமென்றும் கதைத்துள்ளார். இந்திராகாந்தியிடம் இவர் இதனையே வலியுறுத்திக்கேட்டுள்ளார்.

''இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையே எழுத்துமூலமாக குற்றவாளிகளாக கருதப்படுவோர்களை கையளிக்க வேண்டுமென்ற ஒப்பந்தம் இல்லை. ஆனால் ஒரு கொள்கை காணப்படுகின்றது. ஆனபோதிலும் அரசியல் கைதிகளை கையளிக்கவேண்டுமென்றும் இல்லை. இவர் எமது பிரச்னை பற்றி ஒரு தெளிவான கருத்தையோ அன்றி திட்டத்தையோ இந்திராகாந்திமுன் கூறியதாக தெரியவில்லை. ஜனாதிபதி பார்த்தசாரதிமூலம் எம்முன் சமர்ப்பித்த திட்டத்தைப் பார்த்ததும் நாம் கூறிவிட்டோம் நாம் கேட்டது வடக்கு கிழக்கு இணைந்த பிரதேச சபை. ஆனால் இப்பொழுது முன்வைக்கப்பட்டுள்ள திட்டம் மாவட்ட அபிவிருத்திச் சபையில் நிர்வாகக் குழுவில் இருந்த உறுப்பினர்கள் மக்களால் தெரிவு செய்யப்பட்டார்கள் ஆனால் இதில் அதிலும் குறைந்ததே காட்டப்பட்டுள்ளது. ஆகையினால் நாம் இத்திட்டத்தை ஏற்க்க முடியாது ஒன்று.

மேலும் முன்னைதைப் போன்று இரண்டாம் சபையொன்று நிறுவுவதாகவும் குறிப்பிட்டார். இச் சபை எவ்வாறு நிறுவப்படும் இது எப்பெயர் பெறும் என்பதும் இல்லை. இத்துடன் தான் இத்திட்டங்களையே யோசிப்பதாகவும் ஆனால் எதற்கும் இறுதி முடிவை சர்வகட்சி மகாநாடே தீர்மானிக்க வேண்டுமென்றும் ஜனாதிபதி இந்தியாவில் குறிப்பிட்டுள்ளார். இன்று கிழக்கில் சிலபகுதிகளில் தேர்தல் நடைபெறஉள்ளதாக பத்திரிகைகளில் வெளியாகியுள்ளன. நாம் பொதுவாக தேர்தல் எதுவும் வைக்கப்படாது சர்வகட்சி மகாநாடு முடிவடையும்வரையென்றே கேட்டோம் டக்கு மட்டும் என்று தனித்துக் கேட்கவில்லையெனவும் குறிப்பிட்டார்.

## பிரான்சிஸ் அடிகளின் ஜுபிலி விழா

ஏழாலைப்பங்கின் குருவானவரும், புனித இசிதோர் ஆலய நிர்வாக சபையின் போஷகருமான வண. பிரான்சிஸ் அடிகளாரின் ஜுபிலி விழா மேற்படி ஆலயத்தில்வெகு விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. ஜுபிலி நாயகரால் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டது. வண. நேசநாயகம் அடிகள் விழாவில் அதிதியாகக் கலந்துகொண்டார்கள். திருப்பலியில் இசிதோர்ஆலயத்தைச் சேர்ந்த சிறுவர்களால் காணிக்கைப் பவனி நடத்தப் பெற்றது.

புனித இசிதோர் ஆலய நிர்வாக சபை நடத்திய இவ்விழாவில் புனித ஞானப்பிரகாசியார் இளைஞர் மன்றமும் கலந்துகொண்டு பெரும்பங்கை வகித்தார்கள். திருவாளர்கள் ஆர். ஈ. யோசெவ், ரி. மனுவேற்பிள்ளை, கே. நாகமணி, ஆகியோர் சிறப்புரை ஆற்றினார்கள். வண நேசநாயகம் அடிகள் உரையாற்றுகையில் ஏழாலைப் பங்கில் கூடியளவு குருக்களும், கன்னியாஸ்திரிகளும் வரவேண்டுமென்றும், இதற்கு பங்கு மக்கள் இறைவனிடம் செபிக்கவேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார்.

## கிராம அபிவிருத்தி சங்கம்

(யாழ்ப்பாணம்)

கைதடி தெற்கு கிராம அபிவிருத்திச் சங்கத்தின் புனருத்தாரண பொதுக்கூட்டம் திரு. க. கதிரன் தலைமையில் கிராம அபிவிருத்திச்சங்க [illegible] விஷேட உத்தியோகத்தர் திரு. இ. பராாசசேகரத்தின் முன்னிலையில் நடைபெற்றது. புதிய நிருவாக சபையில் தெரிவு செய்யப்பட்டோர் வருமாறு:

தலைவர்: வே. சின்னத்தம்பி, உபதலைவர்: திரு சி. சின்னப்பு, க. கதிரன், செயலாளர்: க. ஞானமுத்து உப செயலாளர்: பூ. குணலிங்கம், பொருளாளர்: சி. தங்கராசா, கணக்கு பரிசோதகர்: மா. மகேஸ்வரன் ஏழு பேர் கொண்ட நிருவாக சபை உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

### மாதர் சங்கம்

கைதடி. தெற்கு மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம் நடப்பு வருட நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப் பட்டனர்.

தலைவர்: திருமதிஞானமலர் இராசையா, உபதலைவர்கள்: திருமதி புஸ்பராணிஅப்பையா செல்வி சி. அரியமலர், செயலாளர்: திருமதி தங்கமலர் கந்தசாமி, உப செயலாளர்: திருமதி மகாலிங்கம் செல்வராணி, பொருளாளர்: திருமதி புவனேஸ்வரி தங்கராசா, கணக்குப் பரிசோதகர்: செல்வி வே. உமாதேவி ஏழு பேர் கொண்ட நிருவாக சபை உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

## தவருன விலாசம்

(யாழ்ப்பாணம்]

பரிட்சை திணைக்களத்தினால் தற்போது அனுப்பப்பட்டு வரும் க. பொ. த. (உயர்தர) பரிட்சையின் அனுமதி அட்டையில் ஒருவருக்கு சொந்தமான அனுமதி அட்டை இன்னொருவர் விலாசத்துக்கு அனுப்பப்பட்டுள்ளது

பெருமாள் மனோகரன் என்ற இந்த மாணவரின் அனுமதி அட்டை 334/1, கே,கே.எஸ். ரோட், யாழ்ப்பாணம் என்ற விலாசத்துக்கு அனுப்பப்பட்டுள்ளது. ஆனால் மேற்படி விலாசத்தில் அத்தகைய பேர்வழி எவரும் இல்லையென அங்குள்ளவர்கள் தெரிவிக்கிறார்கள்.

தற்போது இந்த அனுமதி அட்டை ''ஈழநாடு'' காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அனுமதி அட்டைக்குரிய மாணவர் க. பொ. த. (உயர்தர) பரீட்சையில் கணித பாடங்களை எடுக்கிறார்.

★ அமெரிக்கா ★ கனடா
போன்ற சகல நாடுகளுக்கும் செல்ல விரும்புகிறீர்களா?
டிக்கட் மற்றும் சகல ஒழுங்குகளுக்கும் நாடுங்கள்!
AIR-TRANSIT
TRAVEL CONSULTANTS
99-2/56 B கபூர் பில்டிங், 2 வது மாடி, கொழும்பு-1. போன்: 549365
538 (290), ஆஸ்பத்திரி வீதி, [ஆஸ்பத்திரி முன்பாக] யாழ்ப்பாணம். போன்: 22689

# வவனிக்குளம் ப.நோ. கூ. ச. ரூ. 28 ஆயிரம் கொள்ளை!

(வவனியா)

வவனிக்குளம் ப. நோ. கூ. சங்கத்துக்குச் சொந்தமான 28,145 ரூபா ரொக்கப் பணம் இனந் தெரியாத இளைஞர் கோஷ்டியினரால் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது.

வவனிக்குளம் ப. நோ. கூ. சங்கத்திலிருந்து இந்தப்பணம் உரக் கொள்வனவுக்காக மாங்குளம் வங்கியில் வைப்புச் செய்வதற்காக சங்க லொறியில் கொண்டு செல்லப்பட்ட போதே கொள்ளையடிக்கப்பட்டது.

வன்னி விளாங்குளம் சந்தியில் வைத்து லொறியை வழி மறித்த இளைஞர்கள் மேற்படி பணத்தை கொள்ளையடித்துக் கொண்டு சைக்கிளில் தப்பிச் சென்றுவிட்டனராம்.

இது தொடர்பாக வவனியா பொலிசார் சம்பவ இடத்துக்கு சென்று பார்வையிட்டனர், விசாரணைகள் தொடர்கிறது. [சூ]

# மருமகனால் தாக்கப்பட்டு மாமன் மரணம்

(யாழ்ப்பாணம்)

உறவினரின் திருமணத்திற்கு சென்றுவிட்டு, வீடு திரும்பிக் கொண்டிருந்தபோது மருமகனால் தாக்கப்பட்ட 60 வயது வயோதிபர் நேற்று மரணமானார்.

சங்கானை செட்டியாகுறிச்சியைச் சேர்ந்த நாகேசு கனகசபை என்பவரே இவ்வாறு மரணமானவராவார்.

யாழ் மரண விசாரணை அதிகாரி திரு. க கேசவன் மரண விசாரணை நடத்தினார்.

காங்கேசன்துறை பொலிஸ் சார்ஜன்ட் துரைசிங்கம், சாட்சிகளை ஆஜர் செய்தார் இறந்தவரின் மகன்பாஸ்கரன், மகள் ஜெகதீஸ்வரி ஆகியோர் சாட்சியமளித்தனர்.

இறந்தவர் உறவினரின் திருமணமொன்றுக்கு சென்றுவிட்டு சைக்கிளில் வீடு திரும்பிக் கொண்டிருக்கும்போது சந்தேகநபரான மருமகன் மற்றொருவருடன் வந்து பைப்பினால் தாக்கியதாகவும், உடனே அவர் யாழ் பெரிய ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டாரென்றும் விசாரணையில் கூறப்பட்டது

5 நாட்களுக்கு பின் சுகமாகி வீடு திரும்பினாரென்றும், மீண்டும் இம் மாதம் 11ம் தேதி வீட்டில் மயக்கமடைந்ததால் தெல்லிப்பளை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு நிலைமை மோசமாகவே யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுமறுநாள் அங்கு மரணமானாரென்றும் மேலும் கூறப்பட்டது.

பிரேத பரிசோதனைக்கு உத்தரவிட்ட மரண விசாரணை அதிகாரி விசாரணையை ஒத்தி வைத்தார். (க)

## இன்றைய வானொலியில்

காலை
5-30 நாதாஞ்சலி
5-35 திருமுறைப் பாடல் எஸ். சிவானந்தராஜா
6-00 சைவநற்சிந்தனை
6-05 இஸ்லாமிய நற்சிந்தனை
6-10 அறநெறி ஆரம்
5-25 நிகழ்ச்சி முன்னோட்டம்
6-30 செய்திகள்
6-40 அறிவிப்புகள்
6-50 மெல்லிசைப் பாடல்
6-55 போதிமாதவனின் போதனைகள் சங் ஆரியகிரிதேரோ
7-00 வயலின் எம். எஸ். கோபாலகிருஷ்ணன்
7-30 மாகாணச் செய்திகள்
7-35 இசையமுதம்
8-05 வாத்திய மஞ்சரி
8-15 முஸ்லிம் நிகழ்ச்சி
8-45 காலை ஒலிபரப்புமுடிவு
மாலை
6-00 செய்திகள்
6-10 அறிவிப்புகள்
6-15 புராணபோதம் நா. முத்தையா
6-30 மெல்லிசை
6-45 கிறிஸ்தவ சிறுவர் நிகழ்ச்சி ராஜ்போல்
இரவு
7-00 களத்து மேடு
7-15 முகத்தார் வீட்டில்
7-30 உலகச் செய்திகள்
7-40 நாட்டுப்பாடல்
7-45 விஷேட நிகழ்ச்சி (ஈராக் தேசியதினம்)
8-00 முஸ்லிம் நிகழ்ச்சி
9-00 செய்திகள்
9-10 செய்தியின் பின்னணியில்
9-15 அறிவிப்புகள் - பக்திப் பாடல்கள்
9-30 பாட்டு செம்மை வைத்தியநாத பாகவதர்
10-30 ஹிந்தி பஜன்ஸ்
11-00 ஒலிபரப்பு முடிவு

# "சோவியத் புத்தகக் கண்காட்சிகள் மாணவர்களுக்கு வரப்பிரசாதம்"

(பண்டத்தரிப்பு]

"மக்களின் அறிவு விருத்தியை இலட்சியமாகக் கொண்டு நடத்தப்பட்டுவரும் சோவியத் புத்தக கண்காட்சிகள் எமது மாணவ சமுதாயத்திற்குப் பேருதவி செய்கின்றன. மிகவும் மலிவான விலையில் கிடைக்கும் பொறியியல், மருத்துவம், இரசாயனம் போன்ற துறைகளைச் சேர்ந்த நூல்கள் மாணவ சமுதாயத்திற்கு பெரும் வரப்பிரசாதமாகும்."

இவ்வாறு பண்டத்தரிப்பு ப. நோ. கூ. சங்க மண்டபத்தில் நடைபெற்ற மக்கள் பிரசுராலயத்தினரின் சோவியத் புத்தக கண்காட்சியில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையில் சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ் படையின் யாழ். மாவட்ட ஆணையாளர் டாக்டர் சுகந்தன் இன்னாசித்தம்பி குறிப்பிட்டார்.

மக்கள் பிரசுராலய யாழ். கிளை பிரதிநிதி திரு. எஸ். விஜயானந்தன் தலைமையில் கடந்த சனிக்கிழமையன்று நடைபெற்ற இக்கண்காட்சியை பண்டைத்தரிப்பு பலநோக்கு கூட்டுறவுச் சங்கத் தலைவர் திரு. ஆ. யேசுதாசன் ஆரம்பித்து வைத்தார். இங்கிலாந்து நாட்டிலிருந்து தருவிக்கப்படும் மருத்துவ, பொறியியல், கணித நூல்களுக்கு சமமான பலநூல்கள் இங்கு மிகவும் குறைந்த மலிவு விலையில் கிடைக்கின்றன. இவற்றை எமது மாணவ சமுதாயம் நன்கு பயன்படுத்தி முன்னேற்றம் காண வேண்டும்'' என்றும் டாக்டர் சுகந்தன் இன்னாசித் தம்பி கூறினார்.

மக்கள் பிரசுராலய யாழ். கிளைப்பிரதிநிதி திரு. எஸ்.

(9ம் பக்கம் பார்க்க)

# ஈழத்தின் முதல் தமிழ் ஆயர்



ஈழத்தின் முதலாவது தமிழ் ஆயரும் யாழ் மேற்றிராசனத்தின் 8வது ஆயருமான காலஞ்சென்ற அதிவண.கலாநிதி.ஜே. எமிலியானுஸ்பிள்ளை ஆண்டகை அவர்களின் 12வது நினைவு தினம் இன்று யாழ் மறை மாவட்டம் முழுவதும் நினைவு கூறப்படுகிறது.

ஈழத்துக்கு தமிழ் ஆயர்களை அடுத்தடுத்து வழங்கிய கரம்பொன் கிராமம் தந்த முதல் ஆயரும் இவரே!

கல்லூரி நாட்களிலும் பல்கலைக்கழகத்திலும்-கல்வியிலும் விளையாட்டிலும் திறமைசாலியாக விளங்கிய இவரது சகோதரர்களும் தாம் வகித்த பதவிகளை "முதலாவது இலங்கையர்'' என்ற பதத்தால் அலங்கரித்து திறம்பட சேவையாற்றிப் புகழீட்டித் சாதனை நிலை நாட்டித் தமிழினத்துக்குப் பெருமை தேடித்தந்துள்ளார்கள்.

1950ம் ஆண்டு ஜூலை மாதம் 18ம்திகதி ஆயராகப் பொறுப்பேற்ற இவர் அதற்கு முன் யாழ் மேற்றிராசனத்தில் பல பொறுப்பான தவிகளை வகித்தவர்.

அப்போஸ்தலிக்க கார்மேல் சபைக் கன்னியர்கள் வடபகுதிக்கு வரவித்திட்டவர்இவரே! இன்றைய மடுத்திருப்பதியின் உன்னத நிலைக்கும் 'எமில்' அவரே காரணம் என்றால் மிகையாகாது?

திருக்கேதீச்சர காணிப் பிரச்சினையை நீதிமன்றம் வரைசெல்லவிடாமல் தனது தலையீட்டால் அமைதியாய்த் தீர்த்து தமிழ்மக்களின் நல்லுறவைக் காத்த பெருமை 'எமில், ஆண்டகையையே சாரும்! உருவும், திருவும், அறிவும், ஆற்றலும், அன்பும், பண்பும் நிறைந்து ஒழுக்க சீலராய் சமரச சன்மார்க்க நெறியைப் பேணி அறிஞர்களனைதும் அரசியல்வாதிகளினதும் சகல மதத்தவர்களதும் அன்பையும், மதிப்பையும், அபிமானத்தையும் பெற்று மறை நெறிவாழ்ந்து இறைவனை அடைந்த 'எமில்' என்ற 'எழில்'உருவை இனி நாம் எங்கு காண்போம்? அவரது மறைவு கத்தோலிக்க திருச்சபைக்கும் யாழ் மறை மாவட்டத்துக்கும் தமிழ் மக்களுக்கும் ஒரு பேரிழப்பாகும்!

எஸ்.எம். வரதராஜன்

# பிரிவுபசார விழா

(சாவகச்சேரி)

சாவகச்சேரி மக்கள் வங்கியில் பல வருடகாலமாக காசாளராகக் கடமையாற்றிய திரு. மா. சுப்பிரமணியம் பதவியிலிருந்து இளைப்பாறியதை முன்னிட்டு மக்கள் வங்கி ஊழியர்கள் இவரது சேவையைப்பாராட்டிக்கௌரவித்தனர். (கி)



# ஓய்வு பெற்றார்

]திருகோணமலை]

திருகோணமலை பிரதம புகையிரத நிலைய அதிபரான திரு. க. அன்னலிங்கம் 41 வருட சேவையின் பின் கடந்த மாதம் 1 ம் திகதி ஓய்வு பெற்றார்.

இவர் காங்கேசன்துறை பிரதம புகையிரத நிலைய அதிபராக 1976 தொடக்கம் 1985 வரை சேவை புரிந்தார். 1982 தொடக்கம் 84 வரை திருகோணமலையில் கடமையாற்றினார்.

# வசதிக் கட்டண ஆசிரியர் விபரம் சேகரிப்பு

(பச்சிலைப்பள்ளி)

மன்னார் வவனியா ஆகிய மாவட்டங்களிலுள்ள பாடசாலைகளில் கடமையாற்றுகின்ற வசதிக் கட்டண ஆசிரியர்களின் விபரங்கள் கல்வி அமைச்சினால் கோரப்பட்டுள்ளது

இதனையடுத்து இம்மாவட்டங்களிலுள்ள வசதிக்கட்டண ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்படலாம் என ஆசிரிய வட்டாரங்களில் நம்பப்படுகிறது

பிராந்திய கல்விப்பணிப்பாளரின் அனுமதிக் கடிதத்துடன் கடமையாற்றி வருகின்ற வசதிக்கட்டண ஆசிரியர்களின் விபரங்களே சேகரிக்கப்படுகிறது.

வசதிக்கட்டண ஆசிரியர்களின் கல்வித்தகைமை, சேவையாற்றி வருகின்றகாலம் என்பன போன்ற விபரங்களே கேட்கப்பட்டுள்ளன.

# "நாரந்தனை - யாழ். பஸ் சேவையைச் சீராக்குக"

(யாழ்ப்பாணம்)

'நாரந்தனையிலிருந்து காலை 7-20 மணிக்கும், 7-35 மணிக்கும் இரண்டு சேவைகள் யாழ்ப்பாணத்திற்கு தினமும் ஒழுங்குசெய்ய வேண்டும்.'

ஊர்காவற்றுறை தனியார் போக்குவரத்து சேவைச்சங்கத் தலைவருக்கும், பிரயாணிகள் சார்பில் திரு. க. நடராசா எழுதியுள்ள கடிதத்தில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அக்கடிதத்தில்மேலும் கூறப்பட்டிருப்பதாவது; ஊர்காவற்றுறையிலிருந்துவடக்கு ரோட்டு மூலமாக யாழ்ப்பாணம் வரும் தனியார் மினிபஸ் சேவையில் எந்தவிதமான முன்னேற்றமும் இல்லை காலை 7 மணிக்கும் 8 மணிக்கும் இடையில் 8ம் கட்டை பஸ் தரிப்பு நிலையத்திற்கு மினிபஸ்கள்வரும்போது மிகவும் நெரிசலாக நின்றுகூட வரமுடியாத நிலை இருக்கின்றது. இதனால் 4 அல்லது 5 மினிபஸ்கள் வந்தும் ஒரு மினி பஸ்ஸில்கூட பிரயாணம் செய்யமுடியாத நிலை ஏற்படுகின்றது. மேலும் இந்த நிலை நீடித்தால் 8ம் கட்டை சரவணைச் சந்தி, மைலப்புலம், ஆத்திசூடி முதலிய பஸ்தரிப்பு நிலையங்களிலிருந்து தினமும் யாழ் நகருக்கு வரவேண்டிய உத்தியோகத்தர்கள் வரமுடியாதநிலை உருவாகிக் கொண்டு வருகிறது.

நாரந்தனையிலிருந்து காலை 7-20 க்கும், 7-35 க்கும், இரண்டு சேவைகள்யாழ்ப்பாணத்திற்கு விட வேண்டும் அல்லது ஊர்காவற்றுறையிலிருந்து காலை 7,15க்கும், 7-30க்கும் இரண்டு பெரிய மினி பஸ்களை சேவையில் ஈடுபடுத்த வேண்டும். (க)

# இடமாற்றம்

(கல்வியங்காடு)

யாழ்ப்பாணம் கல்வித் திணைக்களத்தில் கடமை புரிந்துவந்த 25 ஊழியர்கள் இவ்வருடத்துக்கான இடமாற்றங்கள் பெற்றுக் சென்றுள்ளனர் மூன்று ஊழியர்கள் ஓய்வு பெற்றுள்ளனர்.

இட மாற்றங்களைப் பெற்றவர்கள் மன்னார், திருகோணமலை, முல்லைத்தீவு, மட்டக்களப்பு ஆகிய கல்வி மாவட்டங்களுக்குச் சென்றுள்ளனர் (கி)






கலர் பிலிம் சுருள்களை Processing & Printing, 24 படங்களுக்குக் குறையாது செய்து கொண்டால், ஒரு கலர் பிலிம் சுருள் இனமாக வழங்கப்படும், Processing ரூபா 30/- Printing. P.C ஒருபிரதி ரூபா 6.50,

கொழும்பு ஸ்ருடியோ

**ராணி** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-15
சிவாஜி -சரோஜாதேவி
**இருவர் உள்ளம்**

**மனோகரா** (யாழ் நகர்)
தினசரி 10-30, 2-30, 6-30
ஜெய்சங்கர் - விஜயா
**முகூர்த்த நாள்**
(புதிய பிரதி)

**ஸ்ரீதர்** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-00
4-30, 7-00
**EXCALIBUR**
(Adults only)

**சாந்தி** (யாழ். நகர்)
10-30, 2-30, 4-45, 7-00
Kabir Bedii in
GIRL FROM INDIA
action-adults-color
new print-with
four Hindi hit songs

**ராஜா** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-15
எம். ஜி. ஆர்.
ராதாசலுஜா
**இதயக்கனி**
(புதிய பிரதி)

**றீகல்** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30 6-00
கமலஹாசன், ஆலம்,
வை. விஜயா
K. பாலசந்தரின்
**மன்மதலீலை**
[புத்தம் புதிய
வண்ணப் பிரதி]

**ஹரன்** (யாழ். நகர்)
16 முதல் 19 வரை
தினசரி 10-30, 2-30, 6-15
ஜெய்சங்கர்-நிர்மலா
**தாய்க்கு ஒரு பிள்ளை**

20 முதல் 30 வரை
தினசரி 10-30 a.m. 12-30
2-30, 4-30, 6-30 8-30p.m.
LADY CHATTERLEY'S
LOVER
(Strictly for Adults)
10 days

**லிடோ** யாழ். நகர்
தினசரி 10-30, 2-30. 6-30
ஜெய்சங்கர்-ஜெயலலிதா
**பொம்மலாட்டம்**
Coming soon
BURNING

**வெலிங்டன்**
(யாழ். நகர்)
10-30, 2-30, 6-30,
ஜெமினி நடித்த
பாலசந்தரின்
**நான் அவனில்லை**

**வின்சர்** (யாழ். நகர்
தினசரி 5 காட்சிகள்
13 முதல் 22 வரை
Armand Assante
Barbara Carrera
யாழ். சினிமா இரசிகப் பெருமக்கள் இதுவரையும் கண்டுகளித்திராத அற்புதத் திரைவிருந்து! நிமிடத்துக்கு நிமிடம் திகிலும் மர்மமும் நிறைந்த வியப்பான திரைவிருந்து! எதிர்பாராத தாக்கங்களும்-இன்பக் கிளர்ச்சியும் நிறைந்த ஆங்கிலப்படைப்பான
**'I The Jury'**
பார்க்கத் தவறுதீர்கள்.
(கண்டிப்பாக வயது வந்தவர்களுக்குமட்டும்)

## "அமரர் துரைசிங்கம் 400 மீட்டர் ஓட்டத்தில் சாதனை படைத்தவர்!"

### உதவி அரச அதிபர் உரை

(கோண்டாவில்)

''கொக்குவில் இந்துக் கல்லூரியின் பழைய மாணவனும், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் விளையாட்டுத்துறை ஆசிரியருமாக விருந்து அண்மையில் அகாலமரணமடைந்த திரு. ஆர். துரைசிங்கம் அவர்கள் 400மீட்டர் ஓட்டப்போட்டியில் யாழ்ப்பாணத்தில் முதலாமிடம் பெற்றவர். அகில இலங்கைரீதியிலும் இரண்டாமிடத்தைப் பெற்று கொக்குவில் இந்துக் கல்லூரிக்கு அவர் பெருமை சேர்த்தார்.''

யாழ்ப்பாணம் அரசாங்க செயலக தலைமைக்காரியாலய உதவி அரசாங்க அதிபர் திரு. கி. கோபாலரட்ணம் கடந்த வாரம் கொக்குவில் இந்துக் கல்லூரியின் வருடாந் இல்ல விளையாட்டுப் பேட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போது மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து பேசியதாவது:

மாணவர்களின் கல்விக்கும் விளையாட்டுத்துறைக்கும் இடையே ஒரு இடைவெளி ஏற்பட்டுவருகின்றது இந்நிலைக்கு காரணம் தனியார் கல்வி நிலையங்களாகும். பாடசாலையில் மாணவர்கள் பாடக்குறிப்பு எழுதுகின்றார்கள். பின்பு மீண்டும் தனியார் கல்வி நிறுவனங்களில் குறிப்பு எழுதப் போய்விடுகிறார்கள். இதனால் மாணவர்களிடையே கல்வி வளர்ச்சியும் பாதிக்கப்பட்டு இதே போன்று அவர்களின் விளையாட்டுத்துறை ஆர்வமும் பாதிப்படைகின்றது. இந் நிலையை திருத்தி அமைக்க வேண்டிய பொறுப்பும் கடமையும் பெற்றோர்களுடையதாகும்'' என்றார்.

அமரர் துரைசிங்கம் நினைவாக கொக்குவில் இந்துக் கல்லூரிப் பழைய மாணவர்கள் 400 மீட்டர்கள் ஓட்டப்போட்டிக்கென வெள்ளிக் கேடயம் ஒன்று வழங்க வேண்டுமெனவும் அவர் கேட்டுக்கொண்டார். (கி)

## வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலய பழைய மாணவர்கள் உடனடியாக உதவினர்

(மானிப்பாய்)

யாழ். வைத்தீஸ்வரவித்தியாலய பழையமாணவர் மன்றத்தின் ஆண்டு விழாவின் போது நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் பழையமாணவர்கள் சிலர் கல்லூரியின் நூல் நிலையத்திற்கு விஞ்ஞான நூல்கள் வாங்குவதற்கென ஆயிரம்ரூபா அன்பளிப்புச் செய்தனர்.

கூட்டம் கல்லூரிஅதிபர் திரு. செ. குணபாலசிங்கம் தலைமையில் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது விஞ்ஞான நூல்கள் குறைந்தது ஆயிரம் ரூபாவுக்காவது வாங்குவதற்கு பழையமாணவர்கள் நிதிதிரட்டி உதவமுன்வர வேண்டுமென பழையமாணவருள் ஒருவரும் கல்லூரி அபிவிருத்திச் சங்கத்தின் பொதுக் காரியதரிசியும் ஆசிரியருமான திரு க. கணேசலிங்கம் விடுத்தவேண்டுகோளை அடுத்து சில நிமிடங்களில் கூட்டத்தில் கலந்துகொண்ட பழையமாணவர்களிற் சிலர் உடனடியாக ரூபா ஆயிரம் சேகரித்து அதிபரிடம் உடன்கையளித்தனர். இந்தநிதிக்கு மேலும் உதவப் பலர் முன்வந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

தலைவர் தமது உரையின் போது கல்லூரிவளர்ச்சியில் பழையமாணவர் காட்டிவரும் அக்கறைபற்றித்தாம் மிகவும் திருப்தியடைவதாகப் பாராட்டுத்தெரிவித்தார்.

கல்லூரியில் இருந்துவரும் ஆசிரியர்பற்றுக்குறை மற்றும் இடவசதிக்குறைவு ஆகியன பற்றிக் குறிப்பிட்ட அதிபர் இவற்றை நிவர்த்தி செய்யவும் பழையமாணவர்கள் தமக்கு ஒத்துழைப்புத் தர வேண்டுமெனக் கேட்டுக் கொண்டார்.

கூட்டத்தில் உதவி அதிபர் திரு. மு. இராமலிங்கம், பழையமாணவர்களான திருவாளர்கள் டபிள்யு. எஸ். செந்தில்நாதன், எம். கே. ரட்ணவேற்பிள்ளை, சி. குணரத்தினம், எஸ். லோகநாதன், கு. கல்வளைசேயோன், எஸ். சுப்பிரமணியம் ஆகியோர் உரைநிகழ்த்தினர்.

திரு. மு. ஜெகதீசன் சென்றாண்டு அறிக்கையை வாசித்தார்.

ஆண்டுவிழாவில் காலையில் விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்றன.

புதியவருட ஆண்டு உறுப்பினர்கள் தெரிவும் நடைபெற்றது.

## "எதிர்வீரசிங்கத்தின் பின் ஆசிய விளையாட்டுக்களில் எவரும் வெற்றிபெறவில்லை!"

### விளையாட்டுப் போட்டியில் கல்வி அதிகாரி உரை

[அரியாலை]

''உயரப்பாய்தலில் சாதனையொன்றை ஏற்படுத்திய திரு எதிர் வீரசிங்கத்திற்குப் பின்னர் இதுவரை எவரும் ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் வெற்றியீட்டவில்லை. இது மனதிற்கு வேதனை தருவதாகும்''

இவ்வாறு யாழ். பரியோவான் கல்லூரியின் ஆரம்ப பாடசாலையின் வருடாந்த மெய்வல்லுநர்ப் போட்டிக்கு பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட முல்லைத்தீவு கல்வி அதிகாரி திரு சி. தியாகராசா பேசுகையில் குறிப்பிட்டார்.

கல்லூரி அதிபர் திரு சீ.ஈ. ஆனந்தராஜன் தலைமையில் நடைபெற்ற விளையாட்டுப் போட்டியில் திரு சி. தியாகராசா தொடர்ந்து பேசுகையில்; ''இலங்கைக் கல்வித் திட்டத்தில் 1972ம் ஆண்டில் அமுலுக்குக் கொண்டு வரப்பட்ட ஒன்றிணைந்த பாடத் திட்டத்தின் கீழ் மாணவர்கள் பல செயற்பாட்டுத் திட்டங்களில் ஈடுபடவேண்டும். ஆரம்ப பாடசாலை மாணவர்களுக்கு விளையாட்டு மிக முக்கியமானதாக அமைகிறது. பாடசாலை முடிவடைந்த பின்னர் மாணவர்கள் தனியார் கல்வி நிலையங்களுக்கு நேராகப்போவதால் பாடசாலைகளில் நடைபெறும் விளையாட்டுப் போட்டிகளில் அதிக கவனஞ்செலுத்துகிறார்களில்லை. அத்துடன் விளையாட்டுக்களில் சிறந்த பயிற்சியும் பெறுகிறார்களில்லை விளையாட்டின் மூலம் மாணவர்களிடம் கட்டுப்பாடும், ஒழுக்கமும், தலைமைதுவம் ஏற்படுகிறது'' என்றார். (கி)

### சோவியத் புத்தகக்...

(8ம் பக்கத் தொடர்ச்சி)

விஜயானந்தன் உரையாற்றுகையில், மக்கள் புத்தகங்களை தேடி பட்டினங்களுக்கு சென்ற காலம் மாறி தற்போது மக்கள் இருக்குமிடத்தை நாடி புத்தகள் வந்து கொண்டிருக்கின்ற என்று தெரிவித்தார்.

### சந்துக்குத்தி...

(3ம் பக்கத் தொடர்ச்சி)

வயலில் நீரைத் தேக்கிவைக்காமல் குருணல் வடிவான பூச்சி நாசினியை பாவிக்கும்படி விவசாயிகளுக்கு ஆலோசனை கூறப்படுகின்றது.

### தமிழரின்

(2ம் பக்கத் தொடர்ச்சி]

சாலைகளின் முக்கிய பணியாகும் என்றார்

கல்வி அதிகாரிகள் திருவாளர்கள் ப. சண்முகராஜா, வி.எஸ் சிவராமசர்மா, கந்தசாமி ஆகியோரும் உரையாற்றினார்கள்.

### சோவியத்...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

உடன் படிக்கையொன்றில் நான் கைசாத்திட்டுள்ளேள். எமது இரு நாடுகளுக்குமிடையிலான நல்லுறவினை வலுப்படுத்த இவ்வுடன்படிக்கை உதவும் என்பதில் சந்தேகமில்லை.

''நான் ஏற்கனவே 1980ல் சோவியத்யூனியனுக்கு விஜயம் செய்திருந்தேன். ஆனால் இந்த மூன்றாண்டு கால இடைவெளியில் மாஸ்கோவில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் பிரமிக்கத்தக்கவை உஸ்பெக்கிஸ்தானில் பல்வேறு இன மக்கள் சம உரிமைகளுடன் சௌஜனியமாக வாழ்வது கண்டு நான் பெரிதும் மகிழ்ச்சியுற்றேன் ஸமார்கந்தில்புராதானகீழைத் தேய வரலாற்று கலாசாரச் சின்னங்கள் பக்குவமாக பேணப்பட்டு வருவது வியப்புக்குரியது வரும் தலைமுறைகளின் நலன் பொருட்டு இந்த உன்னத கலைச்சின்னங்களைப் பேணுவதில் கலைஞர்கள் வகிக்கும் பங்கு பாராட்டத்தக்கது

''நான் சோவியத்யூனியனுக்கு மேற்கொண்ட விஜயம் மிகவும் பயனுள்ளதாக அமைந்தது. எதிர்காலத்திலும் எமது இருநாடுகளுக்குமிடையிலான நட்புறவும், ஒத்தழைப்பும் மேலும் வலுப்பெறும் எனநான் நம்புகிறேன்''.

## விக்ரோறியா வெற்றியீட்டியது

(பண்டத்தரிப்பு)

கல்வித் திணைக்களத்தின் ஆதரவில் நடைபெற்ற உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் 17 வயதுக்குட்பட்ட மாணவர்கள் பிரிவில் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி வெற்றிபெற்றுள்ளது.

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரிக்கும், சுன்னாகம் ஸ்கந்தவரோதயக கல்லூரிக்கு மிடையில் விக்ரோறியாக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இப் போட்டியில் ஒரு கோலினால் வெற்றியீட்டியது.

## கைப்பந்தாட்டக் குழு

(ஊறெழு)

காங்கேசன்துறை லங்கா சிமெந்து லிமிட்டெட் பாதுகாப்புச் சேவைப் பிரிவில் கைப்பந்தாட்ட விளையாட்டுக் குழுவொன்று புதிதாக அமைக்கப்படவுள்ளது. இதன் ஆரம்ப வைபவத்திற்கு பாதுகாப்புச் சேவைமுகாமையாளர் தலைமை வகித்தார்.

விளையாட்டுக் குழுவின் தலைவராக திரு. வ. இராஜன் தெரிவுசெய்யப்பட்டார். பாதுகாப்புச் சேவையைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் பலர்மேற்படி விளையாட்டுக் குழுவில் அங்கம் வகிக்கிறார்கள்.

## சிரமதானம்

(நீர்வேலி)

கிராம எழுச்சித் திட்டத்தின் கீழ் சிறுப்பிட்டி உதய தாரகை விளையாட்டுக் கழக மைதானம் சிரமதானமூலம் திருத்திஅமைக்கப்பட்டது.

கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் திரு. கு. கிட்டினர் மங்களவிளக் கேற்றி ஆரம்பித்துவைத்த இச் சிரமதானத்தில் கிராம அபிவிருத்தி உத்தியோகஸ்தர் ந. பஞ்சலிங்கம், கிராமசேவை அலுவலர் ஏ. சி. துரைசிங்கம் ஆகியோரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

நீர்வேலி உப அலுவலக வளவு அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகஸ்தர் எம். ஏ. அலோசியஸ் தலைமையில் சிரமதானம் மூலம் துப்பரவு செய்யப்பட்டது.

**யாழ். மக்களுக்கோர் மகிழ்ச்சியான செய்தி**

**நீங்கள் வெளிநாடு செல்ல வேண்டுமா?**

உங்கள் பிரயாணச் சீட்டுக்களை இன்றே யாழ்நகரிலேயே பதிவு செய்து கொள்ள நீங்கள் நாடவேண்டிய நம்பிக்கையான ஒரே ஸ்தாபனம்

**குறேஸ் ட்ரவல் சேர்விசஸ் (பிறைவேற்) லிமிட்டெட்**

பிரான்ஸ், இத்தாலி, டென்மார்க் செல்வதற்கான விசா, பயணச்சீட்டுக்கள் மற்றும் சகல ஏற்பாடுகளும் மிகக் குறைந்த கட்டணத்தில் பெற உடனே நாடுங்கள்.

குறிப்பு:
கனடா செல்வதற்கான சகல ஏற்பாடுகளும் செய்து கொடுக்கப்படும்.

**Cross Travel Services (Pte) Ltd.**
STAGE II, MODEL MARKET
No, 5, 1st FLOOR
BUS STAND CENTRE ROAD,
JAFFNA.
Phone No: 22040, 22065. TELEX No. 22207 (C. T. S) C E

### சாவகச்சேரி நகர குடிநீர் விநியோக

# திட்ட வேலைகள் மீண்டும் ஆரம்பம்

(மட்டுவில்)

சாவகச்சேரி நகர குடி தண்ணீர் விநியோகத் திட்ட வேலைகள் நீண்ட கால இடைவெளிக்குப் பின்னர் திட்ட அலுவலகப் பொறுப்பதிகாரி பொறியியலாளர் க. இரவேந்திரகுமாரன் தலைமையில் நேற்று தொடர்ந்து இயங்கத் தொடங்கியது.

இந்தக் குடிதண்ணீர் விநியோகத்திட்டம் அமெரிக்க வெளிநாகட்டு நிதி உதவி நிறுவனத்தின் உதவியின் கீழ் ஸ்ரீ லங்கா அரசு மேற்கொண்டுள்ளது.

சுமார் 310லட்சம் ரூபா செலவில் மேற்கொள்ளப்படும் இத் திட்டத்தின் முக்கிய பொறுப்புகளை வட மாநிலதேசிய நீர் விநியோக வடிகால் அமைப்புச்சபை மேற்பார்வை செய்து வருகிறது அமெரிக்க றூலிஸ் நிறுவனம் இந்த நீர் விநியோக ஒப்பந்தத்தை எடுத்து, சாவகச்சேரி, பருத்தித்துறை நகரப் பகுதிகளுக்கான அமைப்பு வேலைகளை சமக்கோண் ஸ்தாபனத்திடம் கொடுத்துள்ளது.

சாவகச்சேரி நீர் விநியோகத் திட்டம் சுமார் 179 கிலோமீட்டர் தொலைவுக்கு குடிதண்ணீர் வழங்குவதற்கான வசதிகள் செய்யப்பட்டுள்ளன. சுமார் 265 தண்ணீர்நிலைக் குழாய்கள் அமைக்கப்படவுள்ளன.

இக் குடி தண்ணீர் பெறுவதற்கான நான்கு குழாய்க் கிணறுகள்' நாகர்கோவில் குடத்தினைப் பகுதியில் அமைக்கப்பட்டு, அதன்மூலம் தண்ணீர் மீசாலை பிரதான தண்ணீர் தாங்கிக்குப் பாய்ச்சி அதிலிருது நகர் தண்ணீர் விநியோகம் நடைபெறவுள்ளன.

சாவகச்சேரி குடிதண்ணீர் வேலைதிட்ட பொறுப்பினை, பொறியியலாளர் க. ரவீந்திரகுமாரன் நியமிக்கப்பட்டு, அவருக்கு உதவியாக பொறியியலாளர்கள் செ. கமலநாதன் கே. கருணு ஆகியோரும் கடமையாற்றுகிறார்கள். அமெரிக்கநிறுவனம் தமது பிரநிதியாக பொறியியலாளர் நந்தகுமாரை நியமித்துள்ளார். பொறியியலாளர் கே. ரவீந்திரகுமாரன் இன்றுவேலைகளை உத்தியோகப் பூர்வமாக ஆரம்பித்து வைத்தார்.

---

## இன்று கொடியேற்றம்

(யாழ்ப்பாணம்)

வண்ணை கிழக்கு, கலட்டி-எச்சாட்டி அருள்மிகு மஹாமாரி அம்பாள் ஆலய கொடியேற்றம் இன்று நடைபெறுகிறது.

இம்மாதம் 30-ம் திகதி இரதோற்சவமும் அடுத்தநாள் தீர்த்தோற்சவமும் இடம் பெறும்.

---

### வித்திக்கு,...

(1-ம் பக்கத்தொடாச்சி)

விழாவில் பிரதம விருந்தினராக கலந்து கொள்வார். இதற்கான ஏற்பாடுகளை மணிவிழாக்குழுத் தலைவர் திரு. இரா. நித்தியானந்தன் கழகச் செயலாளர் திரு. த. ஈஸ்வரதாஸ் ஆகியோர் மேற்கொண்டுள்ளனர்.

---

### நேர்முக...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இப்பரீட்சைகள் இம்மாதம் 19-ம் திகதி காலை 9 மணிக்கு நடைபெறும் என அவர் குறிப்பிட்டார்.

---

## இப்படியும் நடக்கிறது

ஒரு நாட்டின் ஐக்கியத்தை (தேசிய ஒருமைப்பாடு என்றும் சொல்லலாம்) கட்டிக் காப்பதில், தேசியப் பத்திரிகைகளின் பங்கு எத்தன்மையானது?

''இது என்ன கேள்வி? ஜனநாயகத்தின் காவல்நாய்களே பத்திரிகைகள்தானே.....'' என்று நீங்கள் முணுமுணுப்பது ஒருபுறமிருக்கட்டும்.

நேற்று வெளியான ஒரு செய்தி ஒரு சின்னச் சந்தேகத்தைக் கிளப்பிவிட்டிருக்கிறது!

ஒரே பத்திரிகை நிறுவனத்தைச் சேர்ந்த பத்திரிகைகள் 'அவை'

'அவை' தமிழிலும் வெளிவருகிறது. ஆங்கிலத்திலும் வெளிவருகிறது. சிங்களத்திலும் வெளிவருகிறது. எல்லாமே தினசரிகள் தான்.

ஜனதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனவின் அதிமுக்கியத்துவம் வாய்ந்த உரை பற்றிய செய்தி அது, அதுவும், ஜூலைக் கலவரம் சம்பந்தமானது. அவர் கூறிய அறிவுரை;

''மீண்டுமொரு ஜூலைக் கலவரம் வரக்கூடாது. தமிழ்க் கடைகளைச் சிங்களவர்கள் தாக்கியதால், சிங்களவர்கள்தான் நஷ்டமடைந்தனர். தமிழரைத் தோற்கடித்து, தாம் வெற்றிகண்டதாக சில சிங்களவர்கள் நினைத்தால் அது முட்டாள் தனமாகும்'' என்று 'பச்சை'யாகக் கூறியுள்ளார் ஜனதிபதி.

இது யாருக்கு அறிவுரை? சாட்சாத் சிங்கள மக்களுக்குத்தான். அவர்கள்தான் இந்த அறிவுரையை பத்திரிகைகளில் பார்க்கவேணடும், படிக்க வேண்டும். ஆனல் செய்தி வந்த விதமோ...

தமிழ்ப் பத்திரிகையில் அந்தச் செய்தி முதல் பக்கத் தலைப்புச் செய்தி. அதே நிறுவனத்தின் ஆங்கிலப் பத்திரிகையில்...வரி வரியாகப் படித்து, தொடர்ச்சிகளையும் பார்த்து, ஒரு படியாக ஏதோ ஒரு மூலையில் சில வசனங்களில் மூழ்கிக் கிடந்தது அந்தச் செய்தி. சிங்களப் பத்திரிகையில்... பூதக்கண்ணடி பிடித்தும் கண்ணுக்குப் புலப்படவில்லை!

பத்திரிகை தர்மம் வாழ்க!

'ஊடுருவி'

---

# லொறிவிபத்தில் சிறுவன் பலி!

(யாழ்ப்பாணம்)

புலோலியைச் சேர்ந்த 10 வயதுச் சிறுவன் லொறி விபத்தில் பலியானன். லொறிச் சாரதி றிமாண்டில் வைக்கப் பட்டுள்ளார்.

புலோலியைச் சேர்ந்த சின்னத்துரை செல்வநாயகம் என்ற சிறுவனே பலியான வராவார்.

யாழ். பதில் நீதவான் எஸ். அமிர்தலிங்கம்மரணவிசாரணை நடத்தினர்.

அதிகாலை 5 மணிக்கு தோட்டத்திற்குச் சென்ற தந்தைக்குச் சிறுவன் தேநீர் எடுத்துச் சென்றபோது கொடிகாமம் மந்திகைச் சந்தியில் சிறுவன் லொறியொன்றினல் அடிக்கப்பட்டு உடனடியாக மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு, பின் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு அங்கு மரணமானதாக விசாரணையில் கூறப்பட்டது.

சந்தேகநபரான லொறிச் சாரதி மார்க்கண்டு ஜோதீஸ்வரனை, இம்மாதம் 19-ம் திகதிவரை றிமாண்டில் வைக்குமாறு உத்தரவிட்ட யாழ். பதில் நீதவான் விபத்து மரணமெனத் தீர்ப்பளித்தார்.

---

### தமிழீழப்...

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

கேட்டுள்ளனர்.

''கடந்த வாரம் வடக்கில் 6 ஹரிஜனர்கள் பயங்கரவாதிகளினல் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர்.

''வடபகுதியில் வாழும் ஹரிஜனர்கள் தமிழீழப் புலிகளால் துன்புறுத்தப்படுகிறார்கள் என்பதை இந்தியாவில் உள்ள ஹரிஜனர்கள் உணர்ந்து கொள்ளவேண்டும்'' என்றார்,

---

### விசாரணையின்....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ஆசிரியர்களும் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

ஆனையிறவு இராணுவ முகாமில் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டபின்னர் இந்த ஆசிரியர்கள்விடுவிக்கப்பட்டனர்என்றுதெரிவிக்கப்பட்டது.

---

## மரண அறிவித்தல்

### மாணிக்கம் கணபதிப்பிள்ளை

வட்டு. மேற்கு, வட்டுக்கோட்டையைச் சேர்ந்த மாணிக்கம் கணபதிப்பிள்ளை (இலங்கை வங்கி யாழ்ப்பாணம் உபமுகாமையாளர்) காலமாகிவிட்டார். அன்னர் ஜெயலட்சுமியின் அன்புக் கணவரும், கல்பன, பிரேமிலா, குகன், ஜெகன் ஆகியோரின் அன்புத்தந்தையும், நாகரத்தினம்மா, தியாகராசா ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார். அன்னரது ஈமக்கிரியைகள் 17-7-84 செவ்வாய்க்கிழமை இன்று பிற்பகல் 4-00 மணிக்கு வட்டுக்கோட்டையில் நடைபெறும். உறவினர்களும் நண்பர்களும் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும். 929

---

## மரண அறிவித்தல்

### செல்லையா இரத்தினம்

உரும்பராய் தெற்கு செல்லத்துரை வீதியைச் சேர்ந்த செல்லையா இரத்தினம் காலமானர். அன்னர் கண்ணம்மாவின் அன்புக் கணவரும், செல்வநாயகம், தங்கராசா ஆகியோரின் அன்புத் தந்தையும், ரதின, சந்திராதேவி ஆகியோரின் அன்பு மாமனரும் வத்சலா, சுலோஜன, சியாமளன், சிமித்திரன், செல்வக்குமார், வாசுகன் ஆகியோரின் பேரனுமாவார். ஈமைக்கிரியைகள் 17-7-84 இன்று காலை 12-00 மணியளவில் வேம்பன் மயானத்தில் நடைபெறும். இத்தகவலை உற்றார், உறவினர் தயவுசெய்து ஏற்றுக்கொள்ளவும். 925

---

## மரண அறிவித்தல்

### நாகலிங்கம் நவரத்தினம்

புங்குடுதீவு 3ம் வட்டாரத்தைச் சேர்ந்த நாகலிங்கம் நவரத்தினம் ஓய்வுபெற்ற நெசவு ஆசிரியர் காலமாகிவிட்டார். இவர் காலம்சென்ற பாக்கியத்தின் அன்புக் கணவரும், காலம்சென்ற பரமானந்தம் ஆசிரியர், தியாகராசா, பாலசுப்பிரமணியம் (தேசிய முகாமை ஆலோசகர், கொழும்பு), திருநாவுக்கரசு (ஓய்வுபெற்ற மின்தறி மேற்பார்வையாளர் அல்லைப்பிட்டி), சரவணமுத்து, சச்சிதானந்தம் (லண்டன்), குலேந்திரன் (மலேசியா), வரதராசன், பன்னீர்ச்செல்வம், திருக்குமாரன் (பிரான்ஸ்), நவமணி, கேசவராணி, புஷ்பராணி (கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்), புவனேஸ்வரி ஆகியோரின் அன்புத் தந்தையாரும், யோகம்மா, இராசலட்சுமி, சொர்ணலட்சுமி, பரஞ்சோதி, கௌரி, வசந்தி (லண்டன்), கமலராணி, இந்திராணி, கனகசபாபதி (கட்டிடத்திணைக்களம் கொழும்பு), பாலசுப்பிரமணியம் (சுவிச்சலாந்து), குணரத்தினம் (பயிர்ச்செய்கை உத்தியோகத்தர்), பாலசுந்தரம் ஆகியோரின் அன்பு மாமனருமாவார். அன்னரின் ஈமக்கிரியைகள் 17-7-84 செவ்வாய்க்கிழமை இன்று காலை 10-00 மணிக்கு புங்குடுதீவு மணற்காடு மயானத்தில் நடைபெறும். உற்றார், உறவினர் இதனை ஏற்றுக்கொள்ளவும். 930

---

### யாருடையது

சித்தன்கேணி சிவன்கோயிலடியைச் சேர்ந்த திரு. ஆர். மகேஸ்வரன் என்பவர் ஒரு கைக்கடிகாரத்தையும், உரும்பிராயைச் சேர்ந்த செல்வன் பி. காளிங்கன் என்பவர் 37 ஸ்ரீ 2005 இலக்கவாகன ராக்ஸ், இன்சூரன்ஸ் என்பவற்றையும் யாழ்ப்பாணதைச் சேர்ந்த திரு. இ. நகுலேஸ்வரன் என்பவர் வவனியா நெளுக்குளத்தைச் சேர்ந்த திரு. பரராஜசிங்கம் ஜெகதீஸ்வரனின் அடையாள அட்டையையும் கண்டு எடுத்து ஈழநாடு அலுவலகத்தில் ஒப்படைத்துள்ளார்கள். உரியவர்கள் அலுவலகநேரத்தில் வந்து பெற்றுக்கொள்ளவும்.

---

### கிளிநொச்சியில்

## இன்று சாம்பியன் மோதல்

(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சி அருணோதயா விளையாட்டுக் கழகத்தின் ஆதரவில் விளையாட்டுக் கழகங்களிடையே நடைபெற்றுவந்த ''7-பேர்'' பங்குபற்றும் உதைபந்தாட்ட ''நொக்கவுட்'' போட்டியின் இறுதிச் சாம்பியன் மோதல் இன்று கிளிநொச்சி 'றெட் றிக்கோ' மைதானத்தில் நடைபெறும்.

இந்தச் சாம்பியன் மோதலுக்கு கிளிநொச்சி அரசாங்க அதிபர் திரு. ந. ஜெயநாதன் பிரதம அதிதியாகக் கலந்து கொள்கின்றார். (வி)

---

## மரண அறிவித்தல்

### சின்னத்தம்பி செல்லையா

மண்கும்பான் மேற்கு 5-ம் வட்டாரத்தைச் சேர்ந்த சின்னத்தம்பி செல்லையா காலமானர். அன்னர் தங்கம்மாவின் அன்புக்கணவரும், காலஞ்சென்ற இராசம்மா, சதாசிவத்தின் சகோதரரும், காலஞ்சென்ற வீரசிங்கம் (செல்லையா அன் சன்ஸ் நகைமாளிகை உரிமையாளர்), இந்திரசித்து (லலிதா நகைமாளிகை உரிமையாளர்), தங்கமலர், சிவலிங்கம் (செல்லையா சிவலிங்கம் நகைமாளிகை உரிமையாளர்), சிவபாதலிங்கம் (செல்லையா சிவபாதலிங்கம் வைரக்கல் நகைமாளிகை உரிமையாளர்), மல்லிகாதேவி ஆகியோரின் அன்புத்தந்தையும், காலஞ்சென்ற நாகம்மா, மகாலட்சுமி, நடராசா, யோகேஸ்வரி, மகுடராணி, பூலோகநாதன் ஆகியோரின் அன்பு மாமனருமாவார்.

அன்னரின் ஈமக்கிரியைகள் 17-07-84 (இன்று) செவ்வாய்க்கிழமை மாலை 4 மணிக்கு மண்கும்பான் மேற்கிலுள்ள அன்னரின் இல்லத்தில் நடைபெற்று சாட்டிமயானத்தில் தகனம்செய்யப்படும். உற்றார், உறவினர். நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும். 938

---

இப் பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 63ம் இலக்க அச்சகத்தில் 1984ம் ஆண்டு ஜூலை மாதம் 17ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post office Sri Lanka under number B 100236/81 Eelanadu P. o. Box 49. Telegram Eelanadu, Telephone: 22389 — 24126.